உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 33 | ஆனந்த – சித்திரை – 10—5—74 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே – சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## குரு வழிபாடு

சமயங்கள் யாவும் நிலைபெறுதலும், வளர்ச்சியுறுதலும் சமயத் தலைவர்களாகிய ஆசாரியர்களாலேயாம். அதனால், சமயத்தில் பற்றுடையவர் யாவரும் தம்தம் சமய ஆசிரியன்மார்களை அன் போடும், ஆர்வத்தோடும் போற்றி வழிபடுவர். அங்ஙனம் வழிபடுவதால் சமய உண்மைகள், ஒழுக்க முறைகள் முதலியன பலர்க்கும் விளங்கிப் பயன் அடைய ஏதுவாகின்றது. ஆகவே, சைவ சமயிகளும் தங்கள் ஆசாரியர்களை ஆர்வத்துடனும் பக்தி யுடனும் போற்றி வழிபடுதல் இன்றியமையாததாம்.

"சைவம் சிவத்தொடு சம்பந்தமாவது" என்ற திருமூலர் வாக்கின்படி, சைவ சமயம், சிவபெருமானை அடைவிக்கும் நெறி யாகும். யாதொன்றையும், உணர்த்தினால் அன்றி உணரமாட் டாத உயிர்கள், சிவனை அடையும் நெறியையும் அப்பெருமானே அறிவித்தால் அன்றி அறியமாட்டா. "காண்பார் ஆர் கண்ணுத லாய்க் காட்டாக் காலே" என்பார் நாவுக்கரசர்.

சிவபெருமான் தன்னை அடையும் நெறியைத் தானே நேர் நின்று உணர்த்துதல், அதற்குத் தகுதி வாய்ந்த ஒரு சிலர்க்கே

யாம். ஏனையோர் பலர்க்கும் அப் பெருமக்கள் வாயிலாகவே அதனை உணர்த்தி யருள்வான். அவ்வாறு உணர்த்தியருள் கின்றவர்களே ஆசாரியப் பெருமக்கள். இவர்கள், திருவருள் உணர்வால் சீவபோதம் நீங்கிச் சிவபோதம் மிக்குச் சிவமே யானவர்கள். ஆதலால், இவர்களது செயல்கள் யாவும் சிவச் செயலேயன்றிச் சீவச் செயல்கள் அல்ல. அதனால், சிவபெருமா னும் தான் உலகிற்குச் செய்ய விரும்பும் செயல்களை இவர்கள் வழியாகவே செய்தருளுகின்றான்.

" துரியங் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாது நிற்கின்ற பெம்மான் – துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன் "

என்பது திருக்களிற்றுப் படியார். எனவே, இப் பெருமக்கள் இறைவன் செய்யும், 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும் முத்தொழிலையும் செய்ய வல்லவராய் இருப்பர். ஞானசம்பந்தர் 'எலும்பைப் பெண்ணாக்கியது, வணிகனை விடம் தீர்த்து வாழச் செய்தது, புத்தன் தலையில் இடிவிழச் செய்தது' இவைகள் முத்தொழிற்கும் முறையே எடுத்துக்காட்டாகும். என்றாலும். இவர்கள் யாதொரு செயலையும் தமது தற்போதத்தின் வழி நின்று செய்யாது, திருவருள் வழிநின்று சிவனது அருட் குறிப் பின் வழியே செய்வர். ஆகையால், அச்செயல்களால் விளைகின்ற நன்மை தீமைகள் யாவும் இவர்களைப் பற்றுதல் இல்லை. இது பற்றியே இத்தகைய பெருமக்களை இறைவனது சகளத் திரு மேனிகளாகக் கொள்கின்றது சைவ சமயம்.

" அகளமாய் யாரும் அறிவரும் அப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற,
தானாகத் தந்ததென் றுந்தீபற "

என்பது திருவுந்தியார்.

ஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர் நால்வரும் இறைவன் தமக்கு நேர்நின்று அருள்செய்யப்பெற்றவர்கள். 'மெய்கண்ட தேவர், அருணந்தி தேவர், மறைஞானசம்பந்தர், உமாபதி தேவர்' என்னும் சந்தானாசாரியர் நால்வரும் இறைவன் குருமூர்த்தி களின் வழிநின்று அருள் செய்யப்பெற்றவர்கள். அத்தகைய குருபரம்பரையில், வழி வழி வந்தமை பற்றியே இவர்கள் 'சந்தா னாசாரியர்கள்' எனப்பெறுகின்றனர். இவர்களது திருமரபு, திருக்கயிலாயத்தில் சிவபெருமானது திருவருளை நேரேபெற்ற நந்தி தேவர் வழிவந்த திருமரபாகும்.

இறைவன், தானே நேர் நின்றும், குருமூர்த்திகளின் வழி நின்றும் ஆட்கொள்ளப்பெற்ற இவ்வாசிரியர்கள் வழியாகவே உலகிற்கு நல்வழி காட்டுவதால், உண்மையை உணர்ந்து உய்தி பெறுவதற்கு இவர்களது உபதேசம், ஒழுக்கம், உறுதி முதலிய வற்றை உணர்வதே வழியாகும். மேலும், இத்தகையோர்க்கு எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி இரங்கும். இரக்கம், தியாகம், தொண்டு முதலிய நற்பண்புகளும் தாமே அமைவன வாம்.

சமயாசாரியர், சந்தானசாரியர்களை நாம் நன்கு நினைந்து வழிபடுதற்கு வாய்ப்பான முறையில் அவர்களது திருநாட்கள் திருவருட் குறிப்பால் முறையாக அமைந்துள்ளன. தமிழ் ஆண்டுத் தொடக்கமாகிய சித்திரை முதலிய நான்கு திங்களி லும் முறையே அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் என்னும் சமயாசாரியரது திருநாட்கள் தொடர்பாக அமைந் துள்ளன. இந்த நாட்கள் முறையே சித்திரைச் சதயம், வைகாசி மூலம், ஆனி மகம், ஆடிச் சுவாதி என்பனவாம்.

சந்தானசாரியர்களை நாம் நமக்கு அணுக்கமாய் உள்ள நான் காமவரிலிருந்து உணர்வதே முறையாதலின், 'உமாபதி தேவர் திருநாள் சித்திரை அத்தம், மறைஞான சம்பந்தர் திருநாள் ஆவணி உத்தரம், அருள்நந்திதேவர் திருநாள் புரட்டாசி பூரம், மெய்கண்டதேவர் திருநாள் ஐப்பசிச் சுவாதி என்று இவ்வாறு அமைந்துள்ளன. இவ்வாசாரியப் பெருமக்களை நாம் நாள்தோறும் நினைந்து பொதுவாக வழிபடினும், மேற்குறித்த திருநாட்களில் பெரிய அளவிலான வழிபாடு விழா முதலியவற்றைச் சிறக்கச் செய்து வழிபடல் வேண்டும்.

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்தில் திருவருட் சிறப்புடன் விளங்கித் தருமையாதீனம் ஞானபீடத்தை நிறுவிச் சமய பரிபாலனம் செய்தருளிய பரமாசாரியர் ஸ்ரீ குருஞான சம்பந்தரது திருநாள் இவ்வாண்டு வைகாசித் திங்கள் 27 ஆம் நாள் (10—6—74) வருகின்றது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆலயம் தருமையில் ஸ்ரீ ஞானபுரீசர் ஆலயமாக விளங்கி, ஆதிசைவர் களால் நித்திய நைமித்திகங்கள் செய்யப்பெற்று வருவது. இதில் கொடியேற்றம் முதல் பத்துநாள் விழாக்களாக 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகள் அவர்கள், தங்கள் ஆதிபரமாசாரிய சுவாமிகளது குருபூஜைத் திருநாளைச் சிறப்புற நிகழ்விக்கின்றார்கள். விழாவின் அங்கமாகச் சமய வகுப்புக்களும், புராண விரிவுரை களும் நிகழ்வது சமய வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

குருபூஜைக்கு மறுநாள் சிவபூசகர்களாகிய மாகேசுரர்களுக்கு முறையான வழிபாட்டினையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் செய்விப்பார்கள். எனவே ஸ்ரீ குருஞானசம்பந்தரது குரு பூஜைத் திருவிழா,

" மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்,
கண்ணினல் அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல் "

என்ற சேக்கிழார் வாக்கிற்குச் சிறந்த ஓர் இலக்கியமாகவே திகழும்.

தங்கள் ஆதிகுருமூர்த்திகளின் குருபூஜை விழாவைப் பத்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடி, நம்மனோர்க்கெல்லாம் வழி காட்டியருள்கின்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைப் பதினொன்றும் நாள் இரவு, அன்பர்கள் பட்டணப் பிரவேசமாக எழுந்தருள்வித்து அவர்களது அருட் கொலுக் காட்சியையும் கண்டு வணங்கிக் குருவருளைப் பெற இருப்பது, நமது வாழ்வின் பயனை நாம் பெறுகின்ற ஓர் நல்ல வாய்ப்பான செயலாகும், ஆகவே, சமயப் பற்றுடையோர் அனைவரும் சமய வகுப்பு, புராணச் சொற்பொழிவு முதலியவற்றில் கலந்து கொள்வதுடன் குருபூஜை விழா, பட்டணப்பிரவேசம் ஆகியவற்றையும் தரிசித்துக் குருவருளின் வழித் திருவருளைப் பெற்று இம்மை மறுமை நலங்களை இனிது எய்தி இன்புறுவார்களாக.

---

கடிதம் :

ARUL. THAGARAJAH,
Programme Organiser (Retd.)
Radio Ceylon.

Chunnakam Ceylon.
2—5—1974.

அங்கயற் கண்ணி பங்கில் வீற்றிருக்கும் செக்கர் விரிசடைச் சொக்கநாயகனை அயராது அர்ச்சிக்கும் பெருந்தவமுடைய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருவடிகளுக்கு வணக்கம் பல. தங்கள் அருளாட்சியில் திருமை ஆதீனம் மேன்மேலும் விருத்தியடைந்து வருவது பெருமகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். தங்களின், கல்வி, ஒழுக்கம், சீலம், கடவுட்பக்தி முதலியவற்றைச் சைவ உலகம் நன்கறியும். தங்கள் ஆதீனத்தின் 25வது முதல்வர் எனக்குத் தந்தையைப் போல் விளங்கினர். அவரின் மறைவு எனக்குக் கவலையை அளித்தபோதிலும் தாங்கள் அந்தக் குரு பீடத்தில் வீற்றிருப்பது எனக்குப் பெறும் ஆறுதலைக் கொடுக்கின்றது.

* * *

"ஞானசம்பந்தம்" பங்குனித் திங்கள் இதழில் தங்களின் புத்தாண்டு அருள் ஆசியுரை புத்தூக்கம் அளிப்பதாய் மிகக் பயனுள்ளதாய் மிளிர்கின்றது.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

திருமுலைப்பால் திருவிழாவில் (27--4--74)

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

சமய உலகம் மகிழ்ச்சியோடு கொண்டாடத்தக்க தனிப் பெருந்திருநாள் இன்றைய நாள். திருஞானசம்பந்தப்பெருமான் உமையம்மை அளித்த சிவஞானப்பாலை உண்டு உலகம் உய்யத் "தோடுடைய செவியன்" என்று அடியெடுத்துத் தேவாரம் பாடத்தொடங்கி சிவநெறி விளக்கம் செய்ய முற்பட்ட திருநாள்.

### திருவாதிரைச் சிறப்பு :

இன்றைய நக்ஷத்திரம் திருவாதிரை. திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்ததும் திருவாதிரை. திருமுலைப்பால் உண்டருளிய திருநாளும் திருவாதிரை. இருபத்தேழு நக்ஷத்திரங்களில் திரு என்ற அடைமொழி சேர்த்து வழங்கும் நக்ஷத்திரங்கள் இரண்டு; ஒன்று திருவாதிரை. இது சிவபெருமானுக்குரிய திருநக்ஷத்திரம். "ஆதிரை நாளுகந்தான்" என்று அப்பரடிகள் குறிப்பிடுகின்றார். பிறிதொரு நக்ஷத்திரம் திருவோணம்; இது திருமாலுக்குரியது. திருவாதிரை அனல் வடிவமாக விளங்கும் நக்ஷத்திரம். திருவோணம் தண்மையுடையதாய் விளங்கும் நக்ஷத்திரம். 'பொங்கு அழலுருவனாக விளங்கும் சிவபிரானுக்கு - திருவாதிரையையும், தண்ணிய அலைகடலில் துயிலும் திருமாலுக்குத் திருவோணத்தையும் இணைத்துக்

கூறுவர் அப்பனும் அம்மையுமாக விளங்கும் இவ்விரு தெய்வங்கட்கு வில்வமும் துளசியும் விருப்பமான பத்திரங்கள். வில்வம் - தங்கச்சத்துள்ளது. துளசி - வெள்ளிச்சத்துள்ளது. இவ்வாறெல்லாம் இந்நாட்டின் இரண்டு பெரிய சமயத் தெய்வங்களுக்குரிய நக்ஷத்திரங்களுக்குத் திரு என்ற அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதைக் காணலாம்.

## அன்புடையவர் யார் ?

ஞானசம்பந்தர் சிவபெருமானுக்குரிய திருவாதிரைத் திருநாளில் அவதரித்ததும், அந்நாளிலேயே திருமுலைப்பால் உண்டதும் சிவநெறி பரப்ப முற்பட்டதும் திருவருட் செயலாக அமைந்த பொருத்தமாகும். ஞானசம்பந்தர் இலைபடர்ந்த பொய்கையிடத்து அழுதலைக்கண்டு பால் சுரந்தாள் அம்பிகை; ஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்விப்பட்ட அவ்வமயமே பால் சுரந்தார்கள் மங்கையர்க்கரசியார். அம்பிகையைவிட மங்கையர்க்கரசியார்க்கு ஏற்றம் கூறுவதுபோலச் சிவப்பிரகாச அடிகள் பாடுகிறார்.

"இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின் — நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தார் ஆர்சொல் எனக்கு."

என்பது அப்பாட்டு. குழந்தை அழுதபின் பால் கொடுப்பது இடையன்புடையார் செயலாகும். அழுதற்கு முன்னே பாலளிப்பது தலையன்புடையார் செயலாகும். இதை அடிப்படையாகக் கொண்டு அம்பிகையைக் காட்டிலும் மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரிடம் பேரன்பு காட்டியவர் என்று உபசாரமாகக் கூறுகிறார் சிவப்பிரகாசர். மங்கையர்க்கரசியாரைச் சிறப்பித்தற் பொருட்டு அவ்வாறு கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டுமே தவிர உமையம்மையைவிட அரசியார் உயர்ந்தவர் என்பது பாடற் கருத்தல்ல.

## அழுதபிள்ளை பால்குடிக்கும் :

அழுதபிள்ளை பால் குடிக்கும் என்ற பழமொழி ஞானசம்பந்தர் வரலாற்றைச் சுட்டிக்காட்டும் இந்நாட்டுப் பழமொழியாக விளங்குகிறது. ஞானசம்பந்தர் சிவஞானப் பாலுண்ட இவ்விழா சீகாழியில் மட்டுமல்ல தலங்கள்தோறும் கொண்டாடும் பொதுவிழாவாகும். ஞானசம்பந்தர் வேத நெறி தழைக்கவும், சைவத்துறை விளக்கம் பெறவும் அமுது அம்மையளித்த ஞானப் பாலுண்டருளிய திருநாள், உலகம் போற்றுவதற்குரிய உயர்ந்த திருநாள்.

## குழப்பங்கள் தீர :

ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட இவ்விழாவும் ஏனைய சமய விழாக்களும் நாட்டுமக்கள் நன்னிலையில் வாழத் துணை புரிவனவாகும். நாட்டில் இன்று எழுந்துள்ள பலவகையான குழப்பங்களும் அகன்று மக்கள் மகிழ்வோடு வாழவேண்டு மானல் கடவுள் துணை வேண்டும்.

தெய்வ நம்பிக்கையும் பக்தி உணர்வும் மனிதனை மேலும் மேலும் உயர்த்துவன. அஸ்திவாரமில்லாத கட்டடம்-ஊற்றில் லாத கிணறு - மணமில்லாத மலர் சிறப்படைய முடியுமா? அதுபோலக் கடவுள் உணர்வு இல்லாத வாழ்வு எவ்வாறு சிறப் புறும்? சட்டத்தால் சாதிக்க முடியாததைச் சமயம் சாதிக்கிறது. சமயநெறி மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது. ஏற்றத் தாழ்வுகளை அகற்றுகிறது. புண்ணிய பாவங்கள் என்ற பெய ரால் மனிதன் தீய செயல்களை விலக்கி நல்ல செயல்களை மேற் கொண்டு வாழத் துணைபுரிகிறது. அச்சுறுத்தியும் வற்புறுத்தி யும் சட்டம் சாதிப்பதைச் சமயம் எளிமையாகச் சாதிக்கிறது. கடவுள் அருள் இல்லாமல் மனிதன் ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் நிலைபெறச்செய்தல் இயலாது. இதை உணர்த்தும் புராண வரலாறுகள் பல.

## புராண வரலாறுகளில் உண்மைப்பொருள் :

இறைவன் திரிபுரமெரித்த வரலாற்றில் கூறப்படும் தத்து வத்தை நீங்கள் அறிந்திருக்கலாம். இறைவன் மேருவை வில்லாக வளைத்து வாசுகியைக் கயிருகப்பூட்டிப் பூமி தேராகவும் சூரிய சந்திரர்கள் தேர்க்கால்களாகவும் தேவர்கள் தேர்க்கு அங்கங்களாகவும் வர தேர்மேல் ஏறிப் புறப்பட்டார் போருக்கு. நாம் இல்லையானல் சிவபிரான் எப்படித் திரிபுரமெரிக்க முடியும் என்று எண்ணிய தேவர்களின் மனக்கருத்து இறைவனுக்குத் தெரிந்தது. குறுநகைபுரிந்தான் இறைவன். தேர் அச்சு முரிந்தது. முப்புரங்கள் பொடியாயின, தேவர்கள் ஆணவத் தால் தாங்கள் எண்ணிய எண்ணத்தைத் தவறு என உணர்ந் தனர். பிழை பொறுத்தருளுமாறு இறைவனைப் பணிந்தனர்; இறைவன் அருள்பாலித்தான் என்பது வரலாறு. தேவர்களின் துணையின்றித்தானே எதையும் சாதிக்கவல்லவன் பெருமான் என்பதை இவ்வரலாறு உணர்த்துகிறது. பிறிதொரு புராண வரலாற்றை உங்கட்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேம். இக்கால மனிதன், இவ்வரலாற்றில் அமைந்த உண்மையை உணர்ந்து திருந்தவேண்டும். மனிதன், கடமை ஒழுக்கம் கட்டுப்பாடு இவற்றேடு வாழக்கடவுள் துணைவேண்டும் என்பதும் கடவுள்

துணையின்றி இவ்வுலகில் ஒழுக்க நெறிகளை நிலைபெறுத்தல் இயலாது என்பதையும் இவ்வரலாறு உணர்த்துகிறது.

தாருகாவனத்து முனிவர்கள் 'கடவுள் இல்லை, ஒழுக்கமேவீடு பேறளிக்க வல்லது' என்ற கொள்கைகளையுடையவர்கள். 'தத்தம் கடமைகளை உணர்ந்து ஒழுக்கத்தோடு வாழ்வதொன்றே போதுமானது' என்ற எண்ணம் உடையவர்கள். கடவுள் துணையின்றி இவற்றை எவரும்தம் வாழ்வில் கடைப்பிடித்தல் இயலாது என்பதை விளக்க இறைவன் பிக்ஷாடனராக எழுந்தருளுகின்றுள். திருமால் மோகினியாக உடன் வருகிறுர். முனிவர்களின் மனைவியர் இறைவனுடைய பேரழகில் மயங்கிக் கற்புநெறி இழந்தனர். மோகினியாக வந்த திருமாலின் வடிவழகில் மயங்கி முனிவர் தம் நிறை தளர்ந்தனர். கடவுள் அருள்தான் ஒழுக்கத்தோடு வாழத் துணைபுரியவேண்டும் என்ற உண்மையைப் பின்னர் உணர்ந்தனர். இறைவனருள் துணையின்றி மனிதன் கடமை ஒழுக்கம் இவற்றைக் கடைப்பிடித்து வாழ்தல் இயலாது. நாட்டில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் தெய்வநம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைவன என்பதை இவ்வரலாறுகள் உணர்த்துகின்றன.

சமய மரபுகள் :

புராண வரலாறுகள் போலவே சமய மரபுகளும் சமுதாய நன்மைக்கு அமைக்கப்பெற்றன. ஆட்சி வசதிகட்கு ஏற்ப நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை செய்தற்கு வசதியாக வயல்கள் வரப்புகள் அமைக்கப்பெற்றுப் பிரிக்கப்பெற்றுள்ளன. அதுபோல சமுதாய வளர்ச்சிக்கும் நடைமுறைக்கும் சாதிப் பாகுபாடுகள் அமைந்துள்ளன. சமுதாயத்தில் பல்வேறு பிரிவுகளாக இவர்கள் பிரிந்து தங்களுக்குள் வேறுபாடின்றிக் காழ்ப்புணர்ச்சியின்றி முன்னேற்றம் பெற்று உய்ந்தனர். ஆசாரம், சீலம், நாகரிகம், பண்பாடு இவற்றால் மக்கள் இனவழி பிரிந்து சமுதாயத்தில் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். மேல்நிலையில் உள்ளவர்களுக்கு-சிவஞானியர்களுக்குச் சாதி வேற்றுமை இல்லை. மொழி - நாட்டு வேற்றுமைகள் இல்லை; யாதும் ஊரே யாவரும் கேளிர் (சுற்றத்தார்) என்ற கொள்கை உடையவர்கள் அவர்கள். ஞானசம்பந்தர் பாடும் பாடல்களுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் அருகில் இருந்து யாழ்வாசிக்கும் பணியைச் செய்துவந்தார். 'அந்தணரில் மேம்பட்ட அப்பூதி அடிகள் வேளாண்குலத்திலவதரித்த அப்பரடிகளைத் தெய்வமாகப் போற்றினுர்' என்பதைப் பெரியபுராணம் கூறுகிறது. உலகியல் நிலையில் இப்பிரிவுகள் சமுதாய அமைப்பு வளர்ச்சிகளுக்கு ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இன்று அப்

பிரிவுகள் அமைக்கப்பெற்ற நோக்கம் மாறிவிட்டது. உயர்வு தாழ்வு வேற்றுமைகள் உருவாகிவிட்டன. காழ்ப்புணர்வு மக்களிடையே தோன்றி உண்மையை மறைத்துவிட்டது. இந் நிலை மாறி வேற்றுமையில் ஒற்றுமை கண்டு உயரவேண்டும்.

## சீகாழி நினைவு :

ஞானசம்பந்தர் வரலாற்றில் பொது நிலையில் இவ்வாறு தோன்றும் கருத்துக்களோடு சிறப்பு நிலையில் நாம் அறிய வேண்டிய சிலவற்றையும் கூற விரும்புகிறோம். ஞானசம்பந்தர் தலங்கள்தோறும் சென்று இறைவனைத் தரிசித்துப் பதிகம் பாடியுள்ளார். எங்குச் சென்றாலும் தம்மை ஆட்கொண்டருளிய சீகாழிப் பெருமானின் நினைவு அவர் நெஞ்சத்தில் நீங்காமல் நிலைபெற்றிருப்பதைக் காண்கிறோம்.

திருவீழிமிழலையில் ஞானசம்பந்தர் தங்கியிருக்கும் காலத்தில் சீகாழி அந்தணர்கள் பலரும் சென்று 'காழிப்பெருமானைப் பிரிந்து பலநாட்கள் ஆயினவே சீகாழிக்கு எழுந்தருளுங்கள்' என வேண்டினர். சம்பந்தரும் புறப்பட எண்ணியிருந்தார். அன்றிரவு ஞானசம்பந்தர் கனவில் பெருமான் தோன்றி காழிக் காட்சியை வீழிமிழலையில் காட்டுவதாகக்கூறி மறைந்தார். பிள்ளையார் விழித்தெழுந்து திருக்கோயிலுக்குச் செல்கின்றார். சீகாழிக் காட்சியைப் பெருமான் தோணியப்பராக ஞானசம்பந்தருக்குக் காட்டுகிறார். இருதலங்களையும் இணைத்துத் திருப்பதிகம் பாடுகிறார் ஞானசம்பந்தர். எல்லாத் தலங்களிலும் எழுந்தருளியுள்ள இறைவன் ஒருவனே என்பதை ஞானசம்பந்தர் வாயிலாக இறைவன் நமக்கு உணர்த்துகின்றார்.

## நன்றி உணர்வு :

மதுரையில் ஞானசம்பந்தர் சமணர்களோடு நிகழ்த்திய அனல்வாதத்தில் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தபோது கிடைத்த பாடல் திருநள்ளாற்றுத் தேவாரப் பாடலாகிய 'போக மார்த்த பூண்முலையாள்' என்ற பாடலாகும். மதுரையில் சைவ நெறி பரப்பி மீண்ட ஞானசம்பந்தர் திருநள்ளாறு சென்று நன்றியோடு பெருமானை வணங்கிப் பாடுகிறார். மதுரை, திருநள்ளாறு இருதலங்களையும் இணைத்துப் பதிகம் பாடுகிறார். "பாடகமெல்லடி" என்று தொடங்கும் இப்பதிகப்பாடலில்,

> "சூடகமுன்கை மடந்தைமார்கள் துணைவரொடும்
> தொழுதேத்திவாழ்ந்த
> ஆடகமாடம் நெருங்குகூடல் ஆலவாயின்கண்
> அமர்ந்தவாறே"

என்ற தொடரால் மதுரை மகளிர் தம் தம் துணைவரொடும் சென்று வழிபடுகிறார்கள் என்று கூறுமுகத்தால் திருக்கோயிலுக்குக் கணவனும் மனைவியும் இணைந்து சென்று வழிபட வேண்டுமென்ற குறிப்பையும் புலப்படுத்துகிறார் ஞானசம்பந்தர். அவர் தம் அருளிப்பாட்டின் திறத்தால் இன்றும் மதுரையில் மகளிர் தத்தம் துணைவரோடு சென்று வழிபடும் காட்சியைக் காணலாம்.

செந்தண்மை :

ஞானசம்பந்தர் வரலாற்றில் சமணர்களைக் கழுவேற்றியது பற்றிய ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டுதானிருக்கிறது. சமணர்கள் தாங்களே தேடிக்கொண்ட இம்முடிவுக்கு ஞான சம்பந்தரைப் பொறுப்பாக்குதல் கூடாது. அவரோடு வாதம் செய்ய முற்பட்டவர்களே சமணர்கள் தான். ஞானசம்பந்தர் இறைவன் திருவுள்ளக் குறிப்பினைக் கேட்டறிந்த பிறகே வாதத்திற்கு இசைகின்றார். வாதத்தைத் தொடங்கிய சமணர்கள் தாங்களே தோற்றால் கழுவேறுவோம் என்று ஒருமுடிவை வகுத்துக்கொண்டார்கள். முடிவில் தோல்வி அடைந்த அவர்களைப் பாண்டிய மன்னன் கழுவேற்றுகின்றான்; செந்தண்மை பூண்ட அந்தணராகிய ஞானசம்பந்தர் இச்செயலைக் கண்டு மறுகுகிறார். வெற்றிபெற்றுச் சைவப் பெருமையை நிலைநாட்டிய ஞானசம்பந்தர் திருக்கோயிலுக்குச் சென்று பாடிய 'விடலால வாயிலாய்' என்ற பதிகத்தில்,

"குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தம்இன்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகமனே"

என்ற பாடலில் அவர்மன நிலை நன்கு புலனாகிறது.

நினைவும் செயலும் :

வாதில் தோற்ற சமணர்கள் அதனால் அடையும் இன்னலுக்காக ஞானசம்பந்தர் மறுகிய செயலே அவர்களை அவ்வின்னலினின்றும் மீட்டதாகின்றது. ஏனெனில் நல்லதாயினும், தீயதாயினும் அதனை மனத்தால் நினைதலே செய்வதற்கு ஒப்பாகும். 'நினைத்தலும் செய்தலோடு ஒக்கும்' என்று விளக்குவார் திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர். குத்தாலத்து இறைவன் பெயராகிய 'சொன்னவாறு அறிவார்' என்பதில் 'அறிவார்' என்பதற்கும் 'செய்வார் – செய்தார்' என்பதுதான் பொருள்.

"கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று ஒரு தொடர் பிறசமயங்களில் கூறப்படும். நம் சமயத்திற்கும் அது பொதுவானதுதான். பெரியோர்சொல்லும் அறிவுரைகளைக்கேளுங்கள்; இதில்உங்கட்கு

நன்மை கிடைக்கும் என்பது அதன்பொருள். 'கேட்டல்' என்ப தற்குக் கேட்டு அதன்படி நடத்தல் என்பதே பொருளாகும். நினைத்தலும் செய்தலேயாதலால் 'தீய காரியத்தை மனத்தால் நினைத்தலும் கூடாது' என்பது விளங்கும். சிறிய குற்றம்தானே? இன்றுமட்டும் இதைச் செய்தாலென்ன என்று நினைத்து செய்யப் புகும் மனிதன் பெரிய குற்றங்களுக்கு இரையாகி விடுவான். இதை உணர்த்தும் கதை ஒன்று உண்டு. மனிதனின் மனோ தத்துவத்தை இது விளக்குவது.

அரசன் ஒருவன் பொற்கிழி ஒன்றை நான்கு வாயில்கள் உள்ள ஒரு மண்டபத்தின் நடுவில்கட்டி, "மதுவருந்துதல், விதவையை மணத்தல், புலாலுண்டல், பசுக்கொலை புரிதல் ஆகிய குற்றங்களை வாயில்கள்தோறும் வகுத்து இக்குற்றங்களில் ஒன்றை வேதாகமசீலர் செய்து இப்பொற்கிழியைப் பெறலாம்" என்று பறை அறைவித்தான், வேதாமங்கள் அறிந்த ஏழை அந்தணன் ஒருவனுக்கு அதைப்பெற வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. 'நான்கு குற்றங்களில் சிறுகுற்றம்தானே இது' என்று தீர்மானித்து மதுவருந்தத் தொடங்கி முடிவில் அறிவு திரிந்து ஏனைய மூன்று குற்றங்களையும் செய்து பெருங்குற்ற வாளியானான் என்று கூறுவார்கள். சிறிய தவறுகள் பெரிய தவறுகளைச் செய்வதற்குத் தூண்டுகின்றன. மனிதன் எந்த ஒரு தவறுக்கும் மனதில் இடம் கொடுக்கக்கூடாது. ஒழுக்கம் மனஉறுதி இவற்றைப் பெறுதற்கு இதுபோன்ற விழாக்களில் ஈடுபட்டு மக்கள் கடவுளை வழிபாடு செய்யவேண்டும்.

**திருமுறைக்கலாநிதி:**

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இத்திருமுலைப்பால் விழாவைச் சிறந்த முறையில் செய்விக்கும் திட்டங்கள் பலவற்றை வகுத்தருளினார்கள். ஞானசம்பந்தப்பெருமானை எழுந்தருளு வித்து அவருடைய வரலாற்றை எல்லோரும் அறியுமாறு அற்புதவிளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் திட்டத்தையும், பல்லாண்டுகள் திருமுறைப்பணி செய்த ஓதுவாமூர்த்தி ஒருவருக்கு 'திருமுறைக் கலாநிதி' என்ற பட்டம் வழங்கி ரூ 501 பணமுடிப்பு வழங்கும் திட்டத்தையும் வகுத்தருளினார்கள். அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று அம் முறையில் பட்டம்பெறும் ஓதுவாமூர்த்தி திரு. சுப்பிரமணிய முதலியார் ஆவார். இசையறிவோடும் பக்தியோடும் திருமுறைத் தொண்டு புரிந்துவரும் அவர் இவ்விருது பெறுதற்கு மிகவும் பொருத்தமானவர். அவர் இவ்வாண்டு 'திருமுறைக்கலாநிதி' பட்டம் பெறுகிறார். 'திருஞானசம்பந்தர் திருவருளால் நலம் பல பெற்று வாழ்க' என வாழ்த்தி இப்பட்டத்தை திரு. சுப்பிரமணிய முதலியாருக்கு வழங்குகிறோம். அன்பர்கள் பலரும் இவ்விழா வில் கலந்துகொண்டு இறைவன் திருவருட் பேற்றுக்கு உரியவர் களாகுக என வாழ்த்துகிறோம்.

# செந்தமிழ்ப்பூம்பொழில்

**[ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் அருள் மொழிகள்]**

தருமையாதீன வெளியீடு எண். 645. பக்கங்கள் 282. அளவு டிம்மி 1 X 8. விலை ரூ 3—50.

தருமையாதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானமாக விற்றிருந்து அருட் செயல்கள் பலவற்றை நிகழ்த்தியருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானசம்பந்தம் திங்களிதழுக்கு அரிய உண்மைகள் பலவற்றை விளக்கி வழங்கிய அருளுரைகளின் தொகுதி இது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் திருமுறைகள், சாத்திரங்கள் தமிழ்மறையாகிய திருக்குறள் முதலியவற்றில் இயல்பாகவே மிக்க ஈடுபாடுகொண்டவர்கள். அதன்பயனாக திருக்குறட் கருத்துக்களை, திருமுறைக் கருத்துக்களோடும் சாத்திரக் கருத்துக்களோடும் ஒப்பிட்டும் – திருமுறைகளையும் சாத்திரங்களையும் ஒப்பிட்டும் அருளுரைகள் பல வழங்கியுள்ளார்கள். அவை அறநெறி அருள்நெறிகளைத் தெள்ளத்தெளிய எளிய முறையில் விளக்குவனவாய் உள்ளன. இவையல்லாமல் திருமூலரது அரிய கருத்துக்கள் சிலவும் அருளுரையில் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு நாற்பத்துமூன்று தலைப்புக்களில் வழங்கியுள்ள அருளுரைகளைக் கொண்டு விளங்கும் இது செந்தமிழ்ப்பூம்பொழில் என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. இது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் ஐந்தெழுத்துபதேசம் போல ஐந்தாந் தொகுதியாக அமைந்திருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். ஐந்தெழுத்து உபதேசம் ஆன்மா ஈடேற வகை செய்வது. அதுபோல இவ்வைந்தாந் தொகுதியும் ஆன்மா ஈடேற்றத்திற்குரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. இத்தகு சிறப்பிற்குரிய இந்நூல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் இரண்டாவதாண்டுக் குருபூஜை விழாமலராக வெளியிடப்பெற்றது. இத் தொகுதியின் இறுதியில் உள்ள அருளுரையின் நிறைவில், 'ஞானம் ஒன்றையே விரும்பி உலகம் உய்வதாக' என்று உள்ளது. இது அவர்கள் கடைசியில் உலகிற்கு வழங்கிய ஆசியாக, திருவருட் குறிப்பால் அமைந்துள்ளது. இதனை அன்பர்கள் பெற்றுக் கற்று அறநெறி அருள்நெறிகளின் ஒற்றுமைப் பொருள்களை உணர்ந்து உய்வார்களாக.

கிடைக்குமிடம்:- மேலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம், மாயூரம். 609001.

# அருளுடைமை

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி எல்,

'இந்த எலும்புக் கூட்டுக்குள்ளே எப்படி உயிர் வந்து குந்திக்கொண்டது? இதன் மர்மம் என்ன?' என்பதை ஆராயப் புகுந்தார் வள்ளுவர். பொருந்தாத இவ்விரண்டு சரக்குகளையும் பொருத்தி வைத்தது அன்பு என்ற சக்திதான் என்று முடிவு கட்டினர்..

" அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு "

என்பது வள்ளுவர் தீர்ப்பு.

ஆனல், உடம்புக்குள் அடைபட்ட உயிர், ஊனுடம்புக்குக் குற்றேவல் செய்யத் தொடங்குகிறது. உடம்பே தான் உயிர் என்றுகூட நாம் மயங்குகிறோம்.

இப்படி மயங்கும் நமக்கு வாழ்க்கையிலே பல திறப்பட்ட உறவுகள் ஏற்படுகின்றன. தாய், தகப்பன், உடன்பிறந்தோர், மனைவி, மக்கள், சுற்றத்தார், சமுதாயம், நாடு, உலகம் - இப்படியாக நம் உறவுகள் விரிந்துகொண்டே போகின்றன. நம் உறவு விரிய, விரிய, நமக்காகவே நாம் வாழ்கிறோம் என்ற உணர்வு தேய்ந்துகொண்டே போகிறது.

தொடக்கத்தில், ஆணவத்தை, அதாவது நம்மையே அடிப்படையாகக் கொண்டிருந்த அன்பு, நாளாவட்டத்தில் பிறர் நலத்தையே அடிப்படையாகக் கொண்ட அன்பாக மலர்கிறது, மலரவேண்டும். தன்னலமற்ற இந்த அன்பையே அருள் என்று அழைக்கிறார் வள்ளுவர்.

அன்புக்கும் அருளுக்கும் உள்ள வேற்றுமையை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கிக்கொள்ளலாம். ஆதியில் மகாத்மா காந்திக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இருவர் :- மகமத் அலி, ஷௌகத் அலி என்ற சகோதரர்கள். அவர்கள் மகாத்மாவைப் பிரிந்து அவருக்கு நேர் விரோதிகள் ஆனார்கள் பிற்காலத்திலே. பிரிவுக்கு என்ன காரணம்? அலி சகோதரர்கள்

காந்திஜியிடம் அளவுகடந்த பற்று வைத்திருந்தார்கள். ஏக போக உரிமையோடு அவரது நட்பை அனுபவிக்க வேண்டும் என்று துடித்தார்கள் — காதலனுக்குக் காதலியிடமிருக்கும் அன்பைப் போன்றது அவர்களுடைய அன்பு. ஆணவத்தை அடிப்படையாகக் கொண்ட அன்பு அது. கற்கண்டைக் கண்டதும் சப்புக்கொட்டுகிற குழந்தையின் அன்பைப் போன்றது அது.

"கற்கண்டு எனக்கு ருசியைக் கொடுக்கிறது. அதனால் அது எனக்கு வேண்டும். கற்கண்டு என்னைப்பற்றி என்ன நினைக்கிறது என்பதைப் பற்றி நான் சிந்திப்பதில்லை." அலி சகோதரர்களுடைய அன்பின் நிலை இப்பேர்ப்பட்டது.

இதே விதமான அன்பை காந்திஜியும் தம்மிடம் செலுத்துவார் என்று எதிர்பார்த்து அவர்கள் ஏமாறினர்கள். ஆனால், மகாத்மாவோ ஆணவச் சிறையினின்றும் விடுதலை யடைந்தவர். ஆணவமற்ற அன்பு அவருடைய அன்பு. தான், தன் குடும்பம், தன் சமுதாயம், தன் நாடு, எல்லாவற்றையும் கடந்து நின்றது அவருடைய அன்பு "எல்லோரிடத்திலும் செலுத்துகிற அன்பைத்தானே இவர் நம்மிடம் செலுத்துகிறர். நமக்கென்று தனி அன்பைக் காட்டவில்லையே," என்று மனம் நொந்து கொண்டார்கள் அலி சகோதரர்கள். தன்னலமற்ற காந்திஜியின் அன்பைத்தான் அருளுக்கு உதாரணமாகச் சொல்லலாம். நவகாளியில் இந்து – முஸ்லிம் கலகம் நடந்தது. அந்தக் கலகத்தில் தலையிட்டால் தம் உயிருக்கு அபாயம் ஏற்படுமே என்று அவர் தயங்கவில்லை. குருதி வெள்ளத்தில் குதித்தார். அருள் வெள்ளத்தில் குதிப்பதுபோல். மற்ற உயிர்களைப் போற்றி வாழும் அருளாளர்களுக்குத் தம் உயிரைப்பற்றிக் கவலையில்லை; அச்சம் இல்லை. இந்த உண்மையை எவ்வளவு உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லுகிறர் குறளாசிரியர்!

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை."

# சிவஞானசித்தியார் தெளிபொருள்விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக்கலைமணி

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

( மலர் 33. இதழ் 5. பக்கம் 264 இன் தொடர்ச்சி )

21. இன்பொடு துன்பம் எல்லாம் எய்துவ கன்மம் என்னில்
நன்புனல் சந்த ஞதி நணுகவும், அணுக ஒண்ணு
மின்பொலி அழலி னேடு மேவவும் நன்மை தீமை
என்செய்த தியம்பி டாய்நீ ; இவையெலாம் இயல்ப
[ தாமே

### இதன் தெளிபொருள்

உடம்பிலே அமைந்த வளர்ச்சி, அறிவு, செயல் இவை பற்றிய வேறுபாடுகட்குப் பூதங்களின் சேர்க்கை முறையையே காரணமாகக் கூறிவிடினும், உடம்பிற்கு வேருய் இன்பத் துன்பங் களைத் தருவனவாய் உள்ள பொருள்களில் சிலர்க்குத் துன்பம் தருவன கிடையாது, இன்பம் தருவனவே கிடைத்தற்கும், சிலர்க்கு அதற்கு மாருய் இன்பம் தருவன கிடையாது, துன்பம் தருவனவே கிடைத்தற்கும் அவர் அவர் முற்பிறப்பிற் செய்த கன்மமே காரணம் என்பதல்லது, பூதங்களின் சேர்க்கை முறை காரணம் என்பது பொருந்தாதன்றே எனின்,

நற் பொருள் தீப்பொருள்கள் கிடைக்கப்பெறுதல் பெருமை கள், காரணம் பற்றி நிகழும் காரியங்கள் அல்ல; காரணம் இன்றி, இயற்கையில் பொருந்துவனவாம் என்பதை, தண்ணீர் சிலவேளைகளில் குளிர்ந்த சந்தனம் முதலியவை இடப்படுதலும், சில வேளைகளில் நெருப்பினுல் சூடேற்றிக் காய்ச்சப் படுதலும் அது முன் செய்த நல்வினை தீவினைகளாகிய காரணம் பற்றியன வாகாது, இயல்பாதல் பற்றி நன்கு அறிந்துகொள்ளப்படும்.

### விளக்கம்

'ஆகவே, அவை பற்றியும் கன்மம் உண்டு எனக் கருதிக் கொள்ள வேண்டுவதில்லை' என்பது குறிப்பெச்சம்.

'இன்பு, துன்பம்' என்பன ஆகுபெயர்கள். "எல்லாம்" என்றது, அப் பொருள்களின் வகைகள் பலவற்றையும் நோக்கி. இங்கும், 'கன்மத்தால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று.

"இயம்பிடாய் நீ" என்றது 'தண்ணீர் முற்பிறப்பிற் கன்மம் செய்தது என்று நீயும் சொல்லமாட்டாய் அன்றோ' என்னும் குறிப்பினது. "காரணம் யாதும் இல்லையாகவே இயல்பு என்பது தானே பெறப்படும்" என்பது கருத்து. "இவை யெலாம்" என்றது பெறப்படும் பொருள்களின் பன்மையால், பெறுதல் பெருமைகள் அளவிலவாதல் பற்றி. (10)

இனி அவர், 'ஆன்மா உண்டு' என்பாரை மறுக்குமாறு கூறுகின்றார் :-

22. காயத்தின் குணம தன்றிக் கண்டதான் மாவுண் [டாகில்,
மாயத்திற் சொல்லி டாதே மனமுதல் ஆறி னுக்குள்
நேயத்த தாகவேண்டும்; அன்றியேநிகழ்த்தும்உண்மை
தேயத்தின் முயற்கொம்பெல்லை செப்புவோர் செய்தி [யாமே.

## இதன் தெளிபொருள்

'ஆன்மா' அல்லது 'உயிர்' என்பது உடம்பின் தன்மையே யன்றி, உடம்பிற்குவேறான ஒருபொருள் அன்று. 'அவ்வாறில்லை; ஆன்மா உடம்பிற்கு வேறாக உள்ள பொருளே' எனின், உடம்பை விட்டு உயிரை வேறாகக் கண்டவர் யாரேனும் உளரோ? 'ஆன்மா காட்சிப் பொருள் அன்றாதலின் அதனைக் காணுதல் இயலாது' எனின், அவ்வாறு சொல்வன வெல்லாம் பொருளற்ற மயக்க உரையே. ஏனெனில், 'உண்டு' எனப்படும் பொருள் எதுவாயினும் அது ஐம்பொறியும், மனமும் ஆகிய ஆறில் ஏதாவது ஒன்றிற்குப் புலனாகவே வேண்டும். அவ்வாறு ஆகாதவற்றைக் கருதலாலும், நூல்களாலும் புலனாவனவாக வைத்து அவற்றின் தன்மையை விரிப்பன எல்லாம், காணப்படாத முயற்கொம்பைக் கருதலாலும், பிறர் சொற்களாலும் புலனாவதாகக் கொண்டு, அதன் அளவு, சிறப்பு, முதலியவற்றை விரித்தல் போல அறியாமை வழிப்படுவனவேயாம்.

## விளக்கம்

'உயிர்' அல்லது 'ஆன்மா' என்பதை உலகாயதர் 'இல்லை எனக் கூறாமல், 'அஃது' உடம்பின் பண்பே; வேறன்று' என்பர். அதனை அவர் கூறுமாறு :-

'அறிவையே' 'உயிர்' அல்லது ஆன்மா என்கின்றோம். 'உடம்பு அறிவு அன்று' என்ற முடிவில், உயிரை அதற்கு வேறு என்று சிலர் சொல்கின்றனர். உடம்பைத் தனித் தனிக் கூறுபடுத்து நோக்கினால் அவற்றுள் எதுவும் அறிவாய்த் தோன்றாமையால் அறிவை உடம்பிற்கு வேறானது என்றல் பொருந்தாது. ஏனெனில், 'வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு' என்பவற்றைத் தனித்தனியாகப் பார்க்கும் பொழுது அவற்றுள் ஒன்றிலாயினும் சிவப்பு நிறம் இல்லை. ஆயினும், அவை மூன்றையுங் கூட்டி மென்றபொழுது அவற்றில் முன்பு இல்லாத சிவப்பு நிறம் தோன்றுகின்றது. அந்தச்சிவப்பு நிறத்தை வெற்றிலை முதலிய மூன்றும் இல்லாமல் வேறே காணமுடியாது. ஆகவே சிவப்பு நிறம் வெற்றிலை முதலிய மூன்றின் நிறமே யன்றி வேறன்று என்பது தெளிவு. அதுபோலவே, உடம்பின் உறுப்புக்கள் (பூதக் கூறுகள்) பலவும் ஒன்று கூடிய பொழுது அக் கூட்டத்தில் முன்பு இல்லாத அறிவு தோன்றும். அந்த அறிவை உடம்பிற்கு வேறாகக் கண்டவர் ஒருவரும் இல்லை. ஆகவே, அறிவாகிய 'உயிர்' என்பது உடம்பின் பண்பே யன்றி வேறன்று.

மேல், "பூதமதின் ஒன்று பிரியப் புலன் இறக்கும்" என அவர் கூறியதும் இக்கருத்துக் கொண்டேயாம். "சொல்லிடாது" என்னும் எதிர்மறைவினையெச்சம், தேற்றேகாரம் ஏற்றது. அன்றி, பிறர் மதம்பற்றி வாதிக்கும் மாணவனைக் குறித்த எதிர்மறை ஏவலுமாம். 'மனம் முதல் ஆறினுக்கும்' என்பது பாடம் ஆகாமை அறிந்துகொள்க. 'ஞேயம்' என்பது 'நேயம்' எனப் போலியாயிற்று. ஞேயம்-அறியப்படுவது. ஞேயத்தது - அறியப் படும் தன்மையது. 'நேயத்ததாகச் சொல்லவேண்டும்' என ஒருசொல் வருவித்துரைக்க. மனக்காட்சியாவது, 'இஃது இவ்வாறுதலின் இன்னதாம்' எனத் துணிதல். அது வெற்றிலை முதலிய மூன்றினும் சிவப்பு இல்லாவிடினும், அவை கூடிய கூட்டத்திலே அது பிறத்தலாலும், அவை மூன்றும் இல்லாதவழி அது பிறவாமையாலும் அது அம் மூன்றன் பண்பே எனத் துணிதல் போல்வது என்பதை அவர் கூறுவதாய மேற்காட்டிய உவமையானே அறிக.

உலகாயதர் பொதுப்பட இங்ஙனம் "உடம்பே ஆன்மா" எனக் கூறுவாராயினும், சிறப்பாக, 'தூல தேகமே ஆன்மா, ஐம்பொறிகளே ஆன்மா, பிராண வாயுவே ஆன்மா, அந்தக் கரணமே ஆன்மா, சூக்கும தேகமே ஆன்மா, கருவிகள் அனைத்துங்கூடிய சமூகமே ஆன்மா எனக்கூறும் வேறுபாட்டி

னைத் தமக்குள் உடையர். அவர் முறையே, 'தூல தேகான்மை வாதிகள்' இந்திரியான்ம வாதிகள், பிராணான்ம வாதிகள், அந்தக் கரணான்ம வாதிகள், சூக்கும தேகான்ம வாதிகள், சமூகான்ம வாதிகள்' எனப்படுவர். (11)

இனி "இறைவன் உண்டு" என்பாரை அவர் மறுக்குமாறு கூறுகின்றார் :-

23. அருவமே இறைவன் ஆகில் அறிவின்று காய மாகும்;
உருவமே யென்னிற் பூதக் கூட்டத்தில் ஒருவ னாகும்;
மருவிய இரண்டுங் கூடி நிற்பவன் என்னில், மண்மேல்
இருவிசும் பொருகல் ஏந்தி நிற்குமோ இயம்பி டாயே.

### இதன் தெளிபொருள்

"இறைவன் ஒருவன் உண்டு" என்றால், அவன் 'அருவம், உருவம்' என்னும் இரண்டில் ஒன்றாய் இருத்தலல்லது, அவ்விரண்டின் வேறாய் இருத்தல் இயலாது. அவற்றுள், 'அருவமாய் உள்ளான்' எனின், 'அருவம்' என்பன வெல்லாம் "ஆகாயம்" என்பது போல இல்லதை உள்ளதாக மயங்கிச் சொல்மாத்திரத்தால் வழங்கப்படுவனவல்லது உள்பொருளல்லவாகலின், இறைவனும் அத்தன்மையனாக, "இறைவன் இல்லை" என்பதாகவே முடியும்.

இனி, "அருவமல்லன், உருவம் உடையன்" எனின், 'நிலம் நீர், தீ, காற்று' என்ற நான்கு பூதங்களை யொழித்து உருவப் பொருள் வேறில்லாமையால், இறைவனும் அவற்றின் பரிணாமப் பொருள்களுள் ஒருவனாய்த்தோன்றி அழிபவனாவான். இறைவன் உண்டென்பவர், "தோன்றியழிதல் இன்றி, என்றும் ஒரு பெற்றியனாய் இருப்பவனே இறைவன்" எனக் கூறுதலால், அவனை உருவம் உடையன் எனின், அஃது இறைவனை உண்டென்பதாகாது, பிறிதொரு பொருளையே உண்டெனக் கூறுதலாய் முடியும். ஆகவே, இருவாற்றானும், இறைவன் இல்லை என்பதே உண்மையாகின்றது.

இனி, மேற்கூறிய இரண்டும் பிழையாதல் பற்றி, "அருவம், உருவம் என்னும் இரண்டும் சேர்ந்த அருவுருவமாய் இருப்பவன் இறைவன்" எனக் கூறின், மாறுபட்ட இருதன்மை ஒரு பொருட்குக் கூடாமை, அருவமாகிய ஆகாயம், உருவமாகிய கல்லைத் தாங்கமாட்டாது கடிதின் வீழ்த்து விடுதல் பற்றி நன்கறியப்படுகின்றது. ஆகலின், "அருவம், உருவம் இரண்டும் கூடிய அருவுருவமே இறைவன்" என்றல் போலியாம்.

## விளக்கம்

அறிவு - அறிதல்; முதனிலைத் தொழிற்பெயர். "இன்றி" என்பதன் இகரம் உகரமாய்த் திரிந்தது. "இன்றி - இல்லாமையால்" எனவும், "ஆகாயம் ஆகும் - ஆகாயம் உண்டென்பதுபோல ஆகும்" எனவும் உரைக்க. கூட்டம், இங்கு, கூடி ஆகின்ற பரிணமம். "இயம்பிடாய்" என்றது, "இயம்ப மாட்டாது, தோல்வித் தானம் எய்துவாய்" என்னும் குறிப்பினது. (12)

'உயிர் உடம்பின் குணமே' என்றும், 'இறைவன் இல்லை' என்றும் கூறுவதால், உலகாயதர், நித்தப் பொருள்களுள் அறிவுடைப் பொருளையும், சடப்பொருள்களுள் நான்கு பூதம் தவிர ஏனையவற்றையும் உடம்படாமை விளங்கும்.

இனி, அவர் தத்துவத் தோற்றம் உணர்த்துமாறு கூறுகின்றார்.

24. பூதத்தே அன்ன மாகி அன்னத்தால் உடலும், புந்தி
பேதத்தே மனமு மாகிப் பிரிந்தமை திருந்த இன்று
வேதத்தே உரைக்க என்னே மேதினி யோர்க ளெல்
கேதத்தே வீழ்ந்து வேறு நெறியல கேட்கு மாறே [லாம்

## இதன் தெளிபொருள்

"நிலம், நீர், வெப்பம், காற்று" என்னும் கருவிகளால் பயிர்கள் முளைத்து வளர்ந்து உணவுப் பொருள்களாகிய பயனைத் தருதலும், அப்பொருளை உண்ணுதலால் கருவிற்குக் காரணமான பொருள் உண்டாகிக் கருவைத் தோற்றுவித்தலும், பின்னும் கருவாய்த் தோன்றிய உடம்பு தாய் வயிற்றில் உள்ள பொழுதும், வெளிப்பட்ட பின்பும் உணவாலே வளர்தலும், உடல் வளர்ச்சிக்கு ஏற்பவே அறிவு வளர்தலும், அவ்வறிவு, (கையில் உள்ள விரல்கள் இயற்கையிலே சிறியதும், பெரியதுமாய் நிற்றல் போல) இயற்கையிலே காமம், குரோதம் உலோபம், மோகம், மதம், மாற்சரியம், அன்பு, அருள், அடக்கம் முதலாகப் பல்வேறு வகையினதாய் நிற்க அவ்வேறுபாடுகளாகிய மனம் உளதாதலும் ஆகிய இவ்வேறுபாடுகளை யாவரும் நுண்ணறிவுகொண்டு உணரும்படி வேதத்திற்றானே சில பகுதிகள் கூறுநிற்க, உலகில் உள்ளவர்கள் அப்பகுதிகளை ஓதி உணராது, "மாயை" அல்லது "பிரகிருதி" என்று ஒன்றைப் படைத்து, "அதினின்றே பிரபஞ்சங்கள் பல்வேறு வகையாய்த் தோன்றுகின்றன" என்றும், "அவ்வாறு

அவற்றைத் தோற்றுவிப்பவன் இறைவன்" என்றும் இவ்வாறு கூறும் சமயக் குருமார்களது நெறியல்லா நெறியாகிய உபதேசங்களைக் கேட்டுக் குற்றத்தில் வீழ்ந்து கெடுதற்குக் காரணமான அவர்தம் அறியாமைதான் யாதோ!

**விளக்கம்**

பிரிதல் - ஒன்று பலவாகி விரிதல். திருந்த - திருத்தமாக உணரும்படி, "வேதத்தே" என்னும் ஏகாரம் தேற்றம். இங்கு அவர் "வேதம்" என்பது பஞ்சாக்கினி வித்தை கூறும் பகுதியையும், "அன்னம் பிரம்மம்" என்பது போலும் வாக்கியங்களையும் ஆம். வேதம் தமக்கு உடம்பாடில்லையாகவும் அதனை உலகாயதர் இங்கு மேற்கோளாகக் காட்டுதல்,

"அழக்கொண்ட எல்லாம் அழப்போம்" †

"கொடா அது வைத்தீட்டி னார்இழப்பர் வான்றோய் மலைநாட உய்த்திட்டும் தேனீக் கரி" *

என்பன போலும் அறநூற் பகுதிகளைக் கள்வர் முதலாயினார் தம் தீச்செயலை நேரிதாக்குதற்கு எடுத்துக் காட்டுதல் போல்வதாம். "மேதினியோர்கள் எல்லாம் நெறியல வேறு கேட்டுக் கேதத்தே வீழுமாறு என்னே" எனக் கொண்டு கூட்டியும், பிரித்துக் கூட்டியும் உரைக்க. நெறியல என்பது பெயர்.

'வேறு நெறிபல கேட்குமாறு' எனப் பாடம் ஓதி, நாத்திகம் அல்லாது ஆத்திகமான நெறிகள் பலவற்றைக் கேட்குமாறு' என உரைத்தலும் ஆம். (தொடரும்)

---

† குறள் – 659. * நாலடி – 10.

---

## பார்வையாளர்கள் குறிப்பு நகல்

**தருமையாதீனம்**

**ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.**

நானும் என்குடும்பத்தினரும் 9-4-74 ஆம் தேதி இந்தத் திருக்கோயிலுக்கு வந்து இறைவனை வழிபட்டோம். இந்தக் கோயில் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டு கோயில் சூப்பிரண்டெண்டும் மற்றைய கோயில் பணிவிடையாளர்களும் சிறப்பாகக் கோவில் நிர்வாகத்தைக் கவனித்துவருகின்றார்கள்.

(Sd) பள்ளத்தூர் அழ, தேனப்பசெட்டியார்,
அஸிஸ்டெண்டு ஜெனரல் மானேஜர்,
9—4—74 இந்தியன் ஓவர்ஸிஸ் பாங்க், சென்னை.

# திருமூலர் காட்டும் பசுவிலக்கணம்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச். டி.

( மலர் 33. இதழ் 5. பக்கம் 248 - இன் தொடர்ச்சி )

ஆன்மாவைப் பசு புண்ணியத்தின் வழிச் செலுத்தினல் அது அறியாமையினின்றும் விடுபட்டு நடராசப்பிரான் திருவடி நெறி தலைப்படும் என்பர் பின்னர்.

ஆன்மாவில் சிவனும், சிவத்தில் ஆன்மாவும் பிரிப்பின்றிக் கலந்திருத்தலை ஓரார்; ஒப்பற்ற ஈசனே எங்கும் நிறைந்து, இடையீடறச் செறிந்து, இயங்குபொருள் நிலைப்பொருள் எவற்றினும் நிலவியிருக்கும் இயல்பினன் என்பர் அடுத்து.

இனி, 'சிவன்' என்ற தலைப்பில் புருடத்துவ மலம் நீங்கப் பெற்ற உயிர் குருவின் உபதேசத்தால் சிவத்தைச் சார நின்ற போது, சீவன் என்ற பெயர் தாங்கித் துரியம் புகுந்து ஞான வடிவாக நிற்றலை உணர்த்துகின்றார். உயிரின் உருவமும், சிவன் பெருமையும், சீவன் கருத்தில் சிவன் உருக்கொள்ளு மாறும், உயிர் அசத்தோடு கூடி அசத்தாயும், சத்தோடு கூடிச் சத்தாயும் உள்ளமை நான்கு மந்திரங்களால் இங்குணர்த்தப் பட்டன.

உயிரின் வடிவம் உரைத்தற்கரிய நுட்பம் உடையது என்பது கவின்பெறும் கவிநயத்துடன் பின்வருமாறு திருமூல தேவரால் கூறப்பட்டுள்ளது:

"மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாஞல்
ஆவியின் கூறு நூ றுயிரத் தொன்றே."

ஆன்மாக்கள் தாம் செய்யும் தவத்தின் அளவாகத் தாமே இறைவனை அறியும் என்பதனை, "தானே யறியும் தவத்தின் அளவே" என்று சுருக்கமாக விளக்குவர். பிரிப்பற்றதான சிவத்தை யோக நெறியிற் பயிலும் ஆன்மாவானது, அப்பயிற்சி முதிர்வினல் சிவனுருவைத் தன் கருத்துள் கண்டு இன்புறும் என்பதனைக்

"கண்டு சிவனுருக் கொள்வர் கருத்துளே" என்று தெளிவுறுத்துவர்.

உயிர் குருவருளாலே அடையும் துரியப்பேற்றைச் செறிவுற உரைப்பர் அடுத்து. மாயையின் காரியமாகிய துன்பங்களிற் றேய்ந்து தானும் அசத்தாகும் உயிர்; ஞான வடிவாகிய குருநாதன் அருளால் சேதனத்தில் தூண்டடப்பட்டு, செயல் ஒடுங்கும் மாயா உபாதிகள் ஒன்றிலும் பொருந்தாமல், பயிற்சி வசத்தால் வாய்க்கப்பெற்ற துரிய நிலையிற் புகுந்து ஞான வடிவாக விளங்கும், என்ற அம்மந்திரத்தின் வடிவம் பின்வருமாறு:

"மாயா உபாதி அசத்தாகும்; சேதனத்து
ஆய குருவரு ளாலே யதில்தூண்ட
ஒயும் உபாதியோ டொன்றின் ஒன்றுதுயிர்
ஆய துரியம் புகுந்தறி வாகவே"

மெய்கண்டதேவ நாயனர் இத் திருமந்திரத்துட் கூறப்பெற்ற பசுவிலக்கணத்தை அடியொற்றியே,

"உணருரு அசத்தெனின் உணராதின்மையின்
இருதிறனல்லது சிவசத்தாமென
இரண்டுவகையின் இசைக்கு மன்னுலகே"

என்று நூற்பாச் செய்தனர். இதனுள் சத்தும், அசத்தும் வரையறை செய்யப்பட்டன. இதற்கொரு புறனடையாக,

"யாவையும் சூனியம் சத்தெதிராகலிற்
சத்தே யறியாது அசத்தில தறியாது
இருதிற னறிவுள திரண்டலா வான்மா"

என்றும் அருளி ஆன்மா சதசத்தாக உள்ளமையை விளக்கியுள்ளனர்.

சத்தையும், அசத்தையும் அறியும் தன்மை உடையதாய், அவ்விரண்டின் கண்ணும் நிலைபெற்ற அறிவுடையதாய், உள்ள பொருளே சத்தும் அசத்துமல்லாத சதசத்தாகிய உயிர் என்பது இந்நூற்பாவின் மூன்றும் அதிகரணப் பொருள்.

"குருவருளாலே" என்று திருமூலர் அருளிய செய்தி, அடுத்த நூற்பாவாகிய எட்டாம் நூற்பாவால் இனிது விளக்கப்பட்டுள்ளது.

குருவருளால் துரியநிலை புகுந்து ஞானவடிவே ஆகும் நிலையை மெய்கண்டார் இந்நூற்பாவின் இரண்டாம் அதிகர

ணத்துத் தெளிவுபடுத்தியுள்ளார். குருநாதனுக வருங்கால், பாலின் நெய் போல மறைந்து வேருய் நிற்றலின்றிச் சுத்தாத்ம சைதன்னியமே தனக்கு வடிவமாகக் கொண்டு தயிரின் நெய் போல விளங்கி நிற்பான் என்று விளக்குகின்ருர் மாதவச் சிவஞான முனிவர். "அவன் அன்னியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்" என்பது மெய்கண்டதேவர் திருவாக்கு,

விஞ்ஞானகலர்க்குத் தன்மையிலும், பிரளயாகலர்க்கு முன்னிலையிலும், சகலர்க்குப் படர்க்கையிலும் நின்று உணர்த்துவான் என்று விளக்குகின்ருர் மெய்கண்டார்.

"மெய்ஞ்ஞானம் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு
அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்"

(சூ. 8. 2. அதி)

இதனை வழிநூல், புடைநூலாசிரியர்களும் மிகத் தெளிவுறுத்தியுள்ளனர்.

அடுத்துப் பசு என்ற தலைப்பில், குருவருளினுல் சிவத்தைச் சாரத் தகுதிபெற்ற சீவன் சிவஞானத்தில் என்றும் நிலைத்திருக்கச் சில முறைகளைக் காட்டுகின்ருர். பாசஞானத்தாற் பயனில்லை என்று கூறுகின்ருர். ஞான அநுபவம் முதிர்ந்த ஆன்மாக்களே திருவருளாகிய பாலைச் சொரிந்து உலகைச் செழிக்கச் செய்வர்; ஏனையோர் எவ்வளவு கற்றிருந்தாலும் வறண்ட பசுக்கள் போல்வர்.

"கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்
முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போலும்
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே"

பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரியவன் பரம்பரன் ஆதலின் அவனை அறிதற்குப் பதிஞானம் ஒன்றே துணையாம் என்பதைப் பின்வந்த மெய்கண்ட சாத்திரம் இனிது விளக்கி யிருக்கின்றது. புவனங்களில் போகங்கள் துய்த்துவரும் உயிர்களைச் சிவத்தோடு சேர்த்துச் சிவத்தை நுகரும் அறிவாற்றலைத் தந்தாலல்லது உலகப்பற்றை விட்டு உய்ய மாட்டாஎன்பதைக்,

"கொல்லையின் மேயும் பசுக்களைச் செய்வதென்
எல்லை கடப்பித் திறைவனடி கூட்டி
வல்லசெய்து ஆற்ற மதித்தபின்னல்லது
கொல்லைசெய் நெஞ்சம் குறிப்பறியாதே"

என்று பேசுவர்.

இனி, வீடுபேறு காட்டப்பட்ட பசு வீட்டின்பத்தை விரும்பும் ஞான வடிவினதாயிருப்பதை உணர்த்துவதே "போதன்" என்ற இறுதிப் பிரிவு.

சிவனெனவும் சீவனெனவும் வேறில்லை. சீவன் சிவனை அறியாது. அவ்வாறு அறியுமாயின் சீவன் சிவனும். அறிவொளியாய் விளங்கும் நடராசப்பிரான் மனவிளக்காகிய மன்னுயிர்க்கெலாம், ஐவாய் விளக்குடைய நாகத்தை ஆயும் கண்காணியாக இருப்பான். (இவ்விடத்துக் 'கண்காணி' என்ற சொல்லாட்சி எண்ணத்தக்கது; கண்காணிப்பாளன் என்று இப்போது வழங்கும் சொல்லின் மூல வடிவமாக இதனைக் கொள்ளல் தவருகாது) கண்காணி ஒருவன் உண்டு என்று உணர்தல் போதன் இயல்பு ஆகும்.

இயல்பாகவே ஞான வடிவினனை இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனை உள்ள சிவபரம்பொருள், பொறிகளை வாயிலாகக் கொண்டு உணரும் தன்மை நீங்கி, இருந்தபடி எவற்றையும் எங்கும் கலந்து நின்று உணரும் போதன் ஆவன். பாசங்களின் நீங்கி அறிவுருவாகிய ஆன்மாக்களிடத்தில் கலந்து நின்று காட்டியும் காண்பன்; ஆன்மாக்கள்தோறும் செறிந்து நின்று அச்சிவனும் ஆவன் என்று தானுக்கு முறையைப் பேசுகின்ருர். தத்துவ தரிசனம் முதலியவற்றை உணர்த்தித் தான் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவனை விளங்கினன் சிவபரம்பொருள் என்று தம்மேலிட்டுக் கூறுகின்ருர் பின்னர். திருவருள் துணை இல்லாமலும், மல இயல்புணராமலும் தவஞ்செய்வாரியல்பைக் கூறி வருந்துகின்ருர் பின்னர். 'போதன்' என்ற தகுதிக்கு வாராதார் இயல்பு என்று இதனைக் கூறலாம்.

இறுதியாக 'எல்லாம் சிவன் செயல்' என்று எண்ணுகின்ற இயல்பு போதன் இயல்பு என்று கூறி முடிக்கின்ருர்:

நாடோறும் ஆன்மாக்களுக்காகச் சிவபிரான் செய்யும் அருள் தொழில்களை நினையார்; வினைகட்கேற்ப இன்ப துன்பங்களை அருத்துதலையும் எண்ணர்; நல்லவர்களுக்கு நாள்தோறும் வழங்கும் அருளையும், பிற உதவிகளையும் நாடோறும் மிகும்

தீவினை உடையோர் கருதார் என்று சுருங்கக் கூறுகின்றார். எல்லாம் சிவன் செயலாகவே கொண்டு நிற்றலே போதநிலையில் பசுவின் இயல் என்பது கருத்து.

சிவஞானபோதப் பதினோராம் சூத்திரம் இவற்றையே விளக்குவது:

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்னும் இந்நூற்பாவின் வார்த்திகப் பொழிப்பில் 'ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உண்ணும்' என்கின்றார் மெய் கண்டார்.

"ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினான்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ணானான் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தால் காணானோ உற்று" (சூ. 11. அதி 1)

என்ற வெண்பாவும், "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்", "உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்தறிதி" என்ற அப்பரடிகள் திருவாக்குக்களும் இங்கு நினைந்துணரத் தக்கனவாம்.

இவ்வாறே பிறிதொரு வெண்பாவிலும் மெய்கண்டார் இக்கருத்திற்கு வேறு திறம் தந்து விளக்குதல் இங்கு ஒப்பிட்டுணரத்தக்கது. அது பின்வருமாறு:

"தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னுள் இருத்தலால்—தன்னுணரும்
நேசத்தார் தம்பால் நிகழுந் ததிநெய்போல்
பாசத்தார்க் கின்றாம் பதி" (சூ. 12. அதி - 3)

இவ்வுண்மைகள் சித்தியாரிலும், "அறிவறியான்" (12 - 3) "செங்கமல" (12) முதலிய பாடல்களிலும், விளக்கப்பெற்றிருத்தல் காணலாம்.

"தன்னை யறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது — முன்னவனே
தானே தானாச் செய்தும் தைவம் என்றும் தைவமே
மானே தொழுகை வலி" (சூ. 12. அதி. 4)

என்ற வெண்பாவும், சித்தியார் (மந்திரத்தால்) (12-3-6) பாடல்களும் இவற்றை விளக்குவனவேயாம்.

# திருச்செந்தூர் விசாக விழா

திரு. என். இராமகிருஷ்ணு

முருகனது ஆறுபடை வீடுகளில் ஒன்று திருச்செந்தூர். செந்தூர் வேலாண்டியின் பெருமை அன்றுமுதல் இன்று வரையில் குன்ருமல் நின்று நிலவுகிறது.

பெருமாள்கோயில் என்ருல் விஷ்ணுவின் கோயில் என்று தான் உடனே மனக்குப்படும். அப்படியே பெருமாள் என்பது திருமாலைக் குறிக்கும் பெயராகத் தமிழ் நாட்டினரால் ஆளப் பெற்று வருகின்றது. ஆனல் மற்ருெரு பெருமாளும் இருக் கின்ருர். அருணகிரிசுவாமிகள் தாம்பாடிய திருப்புகழில் "பெருமாளே! பெருமாளே" என்று முருகனைப் போற்றுகிருர். ஒவ்வொரு திருப்புகழும் பெருமாளே என்று முடிவடைகின்றது. வடிவேற் பெருமாள், மயிலேறும்பெருமாள் என்று முருகன் திருநாமங்கள் வழங்கும். விசாகப் பெருமாள் என்பது அப் பெருமான் திருப்பெயர்களில் ஒன்று. அவன் விசாக நக்ஷத்திரத் தில் திருவவதாரம் செய்ததால் அந்தப் பெயர் உண்டாயிற்று.

முருகனுடைய திருவவதார நாளாகிய வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரத்தன்று முருகன் எழுந்தருளியிருக்கும் தலங் களிலெல்லாம் விழா நடைபெறும். திருச்செந்தூரில் பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வழிபட்டு இன்புறுகின்ருர்கள். முடி கொடுப்பதாகப் பிரார்த்தனை செய்துகொண்டவர்கள் தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுவார்கள்.

திருச்செந்தூர் மிகப் பழைய தலம். கடற்கரையில் உள்ளது. கடலின் அலைகள் கோயில் மதில்களின் மீது மோதிக்கொண்டே இருக்கும். இதனல் இந்தத் தலத்தினை, 'திருச்சீரலைவாய்" என்று சொல்வார்கள். முருகனுடைய தலங்களில் சிறப்பானவை ஆறு. அவற்றை ஆறுபடை வீடுகள் என்று சொல்வது வழக்கம். திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திரு வேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்ற ஆறில் இரண்டாவது படைவீடாகத் திருச்செந்தூர் இருக்கிறது. இதன் பெருமையைச் சங்ககாலத்து நூல்களிலும் பிற்காலத்து நூல்களிலும் காணலாம். நக்கீரர் என்னும் சங்கப் புலவர்

இயற்றிய திருமுருகாற்றுப்படையில் திருச்செந்தூரின் பெருமை சொல்லப்படுகின்றது. முருகனுடைய ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் இயற்றும் செயல்களை அவர் விரிவாக வருணிக்கின்றார். நக்கீரர் அன்றும் கடற்கரையில் அலைமோதும் திருக்கோயிலில் முருகன் எழுந்தருளி இருப்பதைக் கண்டார். இன்றும் அலைமோதும் அலைவாயில் முருகனைக் கண்டு அன்பர்கள் மகிழ்கின்றார்கள்.

தேவர்களுக்கெல்லாம் இடுக்கணை உண்டாக்கிய யாவரையும் நடுநடுங்கச்செய்த சூரபத்மனோடு முருகன் போர்செய்ய எண்ணினான். அப்பெருமான் இந்தத் தலத்திற்கு வந்து தங்கி வீரவாகுவைத் தூது விட்டான். சூரன் சிறிதும் பணியாமல் இருக்கவே அவனோடு போரிடுவதற்குப் புறப்பட்டான். சூரனுடைய தம்பிகளையும், மகனையும், சூரபதுமனையும் சங்காரம் செய்து தேவர்களை எல்லாம் சிறைமீட்டுத் திருச்செந்தூருக்கு எழுந்தருளினான் வடிவேற் பெருமான். அங்கே தான் பெற்ற ஜயத்தைக் கொண்டாடினான். ஜயத்தைக் கொண்டாடிய இடமாதலால் "ஜயந்தி" என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது. அதுவே நாளடைவில் செந்தி, செந்தில், செந்தூர் என்று மாறி வழங்குகின்றது என்பர் .

இன்றும் ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து, அவரவர்கள் வேண்டும் குறைகளை முடித்தருளும் வள்ளலாகத் திருச்செந்தூர் ஆண்டவன் விளங்குகிறான்.

பக்தர்கள் இங்கே வந்து கடலில் முதலில் நீராடுவார்கள். கடலில் நீராடும் துறைக்கு "வதனாரம்ய தீர்த்தம்" என்று பெயர். ஒரு அரசனுடைய மகள் குதிரை முகத்தோடு பிறந்தாள். அரசன் திருச்செந்தூர் ஆண்டவனிடம் வந்து வேண்டிக் கொண்டு வழிபட்டான். இறைவன் ஆணையின்படி இந்தக் கடல் துறையில் மூழ்கியவுடன் அந்தப் பெண்ணின் குதிரை முகம் மாறிப் பெண்ணுக்குரிய முகம் அமைந்தது. நல்ல வதனத்தைத் தந்தமையால் வதனாரம்ய தீர்த்தம் என்ற பெயர் வந்தது. கடலில் நீராடிய பிறகு அதன் அருகில் உள்ள "நாழிக்கிணறு" என்னும் தீர்த்தத்தில் மூழ்குவார்கள். ஒரு நாழியால் முகக்கும்படி சிறியதாக இருப்பதனால் இதற்கு நாழிக்கிணறு என்று பெயர் வந்தது. விரிந்து பரந்த கடல் நீர் ஒரு துளியும் குடிக்கமுடியாதபடி ஒரே உப்பாக இருக்க, அதனருகிலே ஒரு சிறிய கிணற்றில் நல்ல நீர் கிடைப்பது அதிசயமே! இதற்கு "ஸ்கந்த புஷ்கரணி" "வேல் தீர்த்தம்" என்ற பெயர்களும் உண்டு. முருகன் வேல்

நாட்டி இந்தத் தீர்த்தத்தை உண்டாக்கினுன் என்பது புராண வரலாறு.

விசாகத்தன்று முருகன் கோவிலில் விசேஷ ஆராதனை நடைபெறும். நெடுந்தூரத்திலிருந்துவரும் அன்பர்கள் கடலில் நீராடி அப்பால் நாழிக்கிணற்றிலும் நீராடுகின்றார்கள். இப்போது வெளியில் இருந்து குளிப்பதற்கு வசதி செய்யப்பட்டு உள்ளது.

செந்தூரில் அருள்பெற்ற பெரியார் பலர். குமரகுருபர சுவாமிகள் பிறந்தது முதல் ஐந்தாண்டுகள்வரை ஊமையாக இருந்தார். அவருடைய தாய் தந்தையர் குழந்தையை இங்கே கொண்டு வந்து திருக்கோயிலின் முகப்பு மண்டபமாகிய "ஷண்முக விலாசத்தில்" கிடத்திச் சிலநாள் விரதம் இருந்தார்கள். முருகனுடைய திருவருளால் குழந்தை பேசத் தொடங்கியது. பெரும் புலமைபெற்று "கந்தர்கலிவெண்பா" என்ற நூலைப் பாடியது.

சந்நியாசிக் கிராமம் என்னும் ஊரில் பகழிக்கூத்தர் என்ற வைணவ பிராம்மணர் ஒருவர் இருந்தார். அவருக்கு வயிற்று வலி உண்டாயிற்று. எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டார்; நோய் தீரவில்லை. முடிவில் திருச்செந்தூருக்கு வந்து ஒரு பிள்ளைத்தமிழ் பாடினுர். அதைப்பாடி முடித்தவுடன் அவருடைய வயிற்றுவலி நீங்கியது. பக்திச்சுவை ததும்புவது அந்த நூல்.

இத்தலத்திற்கு ஒரு தலபுராணமும், வேறு சில பிரபந்தங்களும் இருக்கின்றன. அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடல்கள் பல உள்ளன. செந்தில் ஆண்டவன் துணை ஒன்றே பெருந்துணை என்று கருதி அன்பர்கள் கூட்டம் கூட்டமாக இங்கேவந்து முருகனுடைய சந்நிதியில் நின்று முறையிடுவதைக் கண்டால் கல்மனமும் உருகிவிடும்.

திருச்செந்தூர்க் கோயில் மிகவும் அழகாகக் கட்டப்பட்டு உள்ளது. பக்கலில் "சந்தனமலை" (வள்ளியம்மை இருந்த இடம்) உள்ளது. அழகான தெப்பக்குளம் உள்ளது. கடற்கரையில் சூரியோதயம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

யாத்ரிகர்கள் தங்குவதற்கு, தேவஸ்தானத்தார் பல விடுதிகளைக் கட்டியுள்ளார்கள். "ஸ்கந்தஷஷ்டி" விசேஷமாகக்கொண்டாடப்படும். சமீபத்தில் அழகான தங்க ரதம் செய்யப்பட்டுள்ளது.

---

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

(மலர் 33. இதழ் 5. பக்கம் 244 இன்தொடர்ச்சி)

கால தத்துவம் நாளமாகும். நாளமும் இதழும் கூடுமிடம் மாயாதத்துவமாகும் ஆதலால் இதுவரையில் பதுமத்தின் கீழ்புறமென்று சொல்லப்பட்டது. வித்தியாதத்துவ முதல் சிவதத்துவம்வரையில் பதுமத்தினூர்த்துவபாகமென்னுமிடத்து அஷ்டவித்யேச்வரரும் அஷ்டதளங்களாகும். அகாரம் முதல் க்ஷகாரம் வரையில் ஐம்பது வர்ணங்களும் ஐம்பது பீஜங்களாகும். அகாரம் பிந்துவுடன் கூடிய ககாரம் முதல் ஸகாரம் வரையிலுள்ள 32 அக்ஷரங்களை இருமுறை உச்சரிக்கப்பட்ட அறுபத்திநான்கு அக்ஷரங்கள் கேஸரங்கள் ஆகும். கர்ணிகை பீத(மஞ்சள்)நிறமாயிருக்கும். கேஸராக்ரங்களில் கிழக்கு முதலெட்டு திக்குகளிலும் நடுவிலும் நவசக்திகளோடு கூடியிருக்கும் தளாக்ர(நுனி), கேஸராக்ர, கர்ணிகாக்ர, விருத்தங்களில் சூரிய சோமாக்னி மண்டலங்களோடு அவற்றிற்கு அதிபர்களான பிரும்ம விஷ்ணு ருத்திரர்களோடுங்கூடியிருக்கும். கர்ணிகா மத்தியில் சத்திமண்டலத்தோடும் அதற்கதிபதியான ஈச்வரனோடும் கூடியிருக்கும் என்று இந்தப்படி பரமசிவனுக்காஸனமான பதுமத்தை ஆதார சத்திக்குமேல் பிருதிவி முதல் சந்திரமண்டலபர்யந்தம் வியாப்தியுள்ளதாகச் சிந்திக்கவேண்டும். இப்படி தியானித்துக் கற்பிக்கும் ஆஸனமே சிவாஸன கற்பனமாகும். — சித்தாந்தசாராவளி

சிவனுக்கு ஞானசத்தியானது அதிஷ்டிக்கும் தேஹமாகும் சிவசம வேதையான ஞானசத்தியே அவருக்கு உபசாரமான மூர்த்தி எனப்படும். ஞானசத்தி மயமான லிங்கத்தில் கிரியாசத்தி மயமான் பீடத்தைச் சேர்ப்பது இலிங்கப் பிரதிஷ்டையாகும். — மதங்கபாரமேச்வரம்.

இவ்வாறு பஞ்சாஸனம் பூஜைசெய்து தண்டபங்கி, முண்டபங்கி, வக்த்ரபங்கி, கலாபங்கி, அஷ்டத்ரிம்சத்கலாதியா

ஸம், அந்தர்மாத்ருகை, பாஹிர்மாத்ருகாநியாஸம் முதலிய நியாசங்கள் செய்து வித்யாதேஹத்தியானம் செய்யவேண்டும்.

शान्तं पद्मासनस्थं शशिधरमकुटं पञ्चवक्त्रं त्रिणेत्रं
शूलं वज्रं च खड्गं परशुक मभयं सव्यभागे वहन्तम ।
नागं पाशं च घण्टामनलं करयुतं साङ्कुशं वामभागे
नानालंकारयुक्तं स्फटिकमणि निभं नौमि सादाख्य रूपम ॥

இவ்வாறு வித்யாதேஹத்தியானம் செய்து நேத்ரநியாஸம் செய்துகொண்டு ஆவாஹனம் செய்யவேண்டும்.

ஆவாஹனம் :- முதல் மூலாதாரத்தைப் பாவித்து அங்கிருந்து பிரகாசிக்கின்ற மந்திர சத்திமயனைத் தன்னை தியானித்து மூலாதாரத்தில் குண்டலிநின்ற இடத்திலிருக்கும் ப்ராஸாத மந்திரத்தைத் தியானித்து அகாரம் முதலிய பதினாறு கலைகளைக் கடந்து உன்மன்யதீதனை பரமசிவனை ஆவாஹனம் செய்யவேண்டும்.

அதாவது: அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்த சந்திரம், நிரோதி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபிநீ, ஸமனா அனுச்ரிதா, அனுதா, அனந்தா, வியோமரூபிணீ, உன்மனா என்று கலைகள் பதினாறு.

இந்த அகாரம் முதலிய பதினாறு கலைகளிலும் உட்பிரிவான கலைகள் மொத்தம் அறுபத்துநான்கு. அவைகள்,

அகாரகலையில், விஜயா, சௌம்யா, அம்சுசம்ஜ்ஞா, திருதி, மதனா, பந்திநீ, மோசினீ, மாயா, மோஹிநீ, போதிநீ என்று 10.

உகார கலையில்:- குஹா, மனோரமா, தீப்தா, சுதீப்தா, பரமகாரிகா, சுதூம்ரா, பிங்களா, பீதா, வாருணீ, சீக்ரகா, அசலா, சசாங்கா, சுப்ரபாங்கா, ஞானதா, மோக்ஷதா, பரா, என்று 16.

மகாரகலையில்:- சுவர்ணா, சிராவணீ ஜல்பா, உத்க்ருஷ்டா, பிராணவர்த்தினீ, சுசப்தா, வாஹிநீ, யோக்த்ரீ மனனீ, பாவினீ, சுபாப்ராம்மீ, தினப்ரதானா, நியோக்ஷி, ரேத்தாப

வாஹிநீ, பித்ருமார்காநுகா, தேவமார்க்காநுகா, ஆகர்ஷணீ, விகர்ஷணீ, ப்ராணபந்தனு, சித்தஸ்த்தா, ஊஸம்ஸ்த்தா, தூமா, த்ருவா என்று 24.

விந்து கலையில்:- நிவர்த்தி, பிரதிஷ்டா, வித்தை, சாந்தி என்ற கலைகள் 4.

நாதகலைகள்:- இந்திகா, தீபிகா, ரோசிகா, போசிகா, ஊர்த்துவகா, வியாபினீ, வியோமரூபிணீ, அநந்தா, அநாதா, அநாசிருதா, என்று 10. ஆகவே இந்த அறுபத்துநான்கு கலைகளுக்கும் முறையே பிரும்ம விஷ்ணு ருத்ர ஈச சதாசிவர்கள் அதிபர்களாவார்கள்.

ஆவாஹனம் செய்ய முதலில் புஷ்பாஞ்சலியை மூலாதாரத்தில் வைத்து கிரமமாக உயரக்கொணர்ந்து இருதய ஸ்தானத்தில் சற்றுநேரம் நின்று மூலமந்திரத்தின் அகாரத்தை விட்டு அதனுல் பிரமத்தியாகம் செய்து மேல்கண்ட ஸ்தானத்தில் நின்று உகாரத்தை விட்டு விஷ்ணுத்தியாகம் செய்து மேல் தாலுஸ்தானத்தில் நின்று மகாரத்தை வீட்டு ருத்ரத்தியாகம் செய்து மேல் புருவ நடுவில் நின்று விந்துவைவிட்டு ஈச்வரத்தியாகம் செய்து, மேல் பிரும்மரந்திரத்தில் நின்று நாதத்தைவிட்டு சதாசிவத் தியாகஞ்செய்து மேல் சப்தம ஸ்தானமாகிய துவாதசாந்தத்தில் நின்று உன்மனியந்தத்திலிருக்கும் பரமசிவனிடத்தில் ஸோஹம் பாவனையினுலே ஒருமையடைந்து இரண்டற்றதாகத் தியானித்துப் பின் புஷ்பாஞ்சலியைக் கீழே கொணர்ந்து புருவநடுவில் சற்று நேரம் நின்று கண்டத்தினின்றும் துவனி போன்ற ஒளியுள்ளதாய் கொஞ்சம் ஸகளமாகவிருக்கும் பரசிவ தேஜஸ்ஸை ஹ்ருதய ஸ்தானத்திலிருக்கும் புஷ்பாஞ்சலியை யடைந்ததாகத் தியானித்து பூஜாலக்ஷ்யமான லிங்கம் பிரதிமைகளில் வைத்து ஆவாஹனம் செய்யவேண்டும். இலிங்கத்தில் செய்யப்படும் ஆவாஹனம் ப்ரதிஷ்டாங்கமாவாஹனம் பூஜாங்கமாவாஹனம் என்று இரண்டுவிதம்.

பிரதிஷ்டா காலத்தில் இலிங்கத்தில் செய்யப்படும் ஆவாஹனம் ஜீவநியாஸரூபம் சித்வ்யக்திவ்யஞ்சனரூபம், பூஜா காலத்தில் செய்யப்படும் ஆவாஹனம் அபிமுகீகரணம் என்று பெயர் பெறும்.

ஆவாஹனம்:- எப்படி காஷ்டத்தில் எங்கும் நிறைந்த நெருப்பானது மதனத்தினலே ஓரிடத்தில் பிரகாசிக்கச் செய்யப்படுமோ? அப்படியே எங்கும் நிறைந்த வஸ்துவை ஓரிடத்தில் பிரகாசிக்கச் செய்வது ஆவாஹனம் என்பதால் இதனல் சிவனது வியாபகத் தன்மைக்கு ஹானியில்லை என்று அறிக.

பின்னும் இவ்விடத்தில் ஆவாஹனம் மானத வியாபாரம், அதாவது ஒப்பத்துடன் சிரத்தையுடன் மூலமந்திரத்தைச் சொல்லி சிவனையழைத்து அபிமுகமாகச் செய்தல் ஆவாஹனம்.

இந்த அபிமுகீகரணம் ஈசானமுகத்திற்கேயாகும். எந்த திக்கில் துவாரமிருக்கிறதோ அதைக் கிழக்காகச் செய்ய வேண்டும். அவ்விடத்தில் தத்புருஷமும் ஊர்த்துவ முகமான ஈசானமுகமும் அபிமுகமாகும்.

ஸ்தாபனம்:- என்னை அனுக்ரஹிக்கும் பொருட்டு தயாநிதியான பகவான் இங்கே இலிங்காதியில் எழுந்தருளியிருக்கவேண்டும் என்று பக்தியுடன் பாவிக்கும் மனோ பாவனையே ஸ்தாபனம் ஸ்தாபித்தலாகும்.

சன்னிதானம்:- சமீபித்தசம்பந்தம். அதாவது பூஜ்யராகிய ஸ்வாமிக்கும் பூஜகனுகிய தனக்கும் அனுக்ரஹிக்குந் தன்மையும் அனுக்ரஹிக்கப்படும் தன்மையுமாகிய சம்பந்தம். இச்சம்பந்த பாவனையே சாந்நித்யம் செய்தலாகும்.

நிரோதநம்:- பகவானே பரமசிவனே எப்போதும் என்னிடத்தில் அநுக்கிரஹம் வைத்திருக்கவேண்டுமென்னும் பிரார்த்தனையே நிரோதநம் நிரோதித்தலாகும். பக்குவமயருக்கு சிவத்தன்மை தோற்றுவது நிரோதனம் என்பது கருத்து.

அவகுண்டனம்:- சிவனுடைய ஹ்ருதயாதிஸ்தானங்களில் ஹ்ருதயாதி மந்திரங்களைக் கவசம் சுற்றுவதுபோல் நியாசம் செய்வது அவகுண்டனம்.

(தொடரும்)

# செய்திகள்

### தருமையாதீனத்தில்
## உமாபதிதேவ நாயனார் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் சந்தானசாரியருள் நான்காமவராகிய ஸ்ரீஉமாபதிதேவ நாயனார் குருபூஜை விழாவை (3–5–74) முன்னிட்டு, சமயாசாரியர் சந்தானாசாரிய மூர்த்தங்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். மாலை 7 மணி அளவில் வித்துவான். திரு. வி, சபேசன் அவர்களால் உமாபதி தேவர் வரலாறும் அருள் நூல்களும் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

### தருமையர் தீனம்
## சிதம்பரம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் திருமடத்தில் ஸ்ரீஉமாபதிதேவ நாயனார் குருபூசை விழா

திருக்கயிலை நந்தி மரபில் வந்த சந்தானாசாரியருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் குருபூஜைத் திருநாளில் (3—5—74) கொற்றவன்குடித் திருமடத்தில் பகலில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை 5 மணி அளவில், எழுந்தருளிவழிபட்டு, தில்லை நடராசப்பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல் பாவாடை நிவேதனம் செய்வித்து சிறப்பு வழிபாடாற்றினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும் கலந்துகொண்டு ஸ்ரீ உமாபதி தேவரையும் ஸ்ரீ நடராசப் பெருமானையும் தரிசித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும், சிதம்பரம் கனகசபை நகரில் உள்ள தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். பின்னர் ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் குருபூஜை விழாவை முன்னிட்டு சிறப்புக் கூட்டம், சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் செகரட்டரி. பிர்மஸ்ரீ இராமலிங்கதீக்ஷிதர் M.A. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார், மகாவித்துவான். திரு. ச. தண்ட

பாணி தேசிகர், திருநெறிச்செம்மல், திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோர் ஸ்ரீ உமாபதிதேவ நாயனர் அருளிய எட்டு நூல்கள் பற்றியும் அவரது அருள் வரலாறு பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்விழாவிற்குவந்திருந்தோர‌னைவருக்கும்பிரசாதங்கள் வழங்கப்பட்டன. அன்பர்கள் பலர் கலந்துகொண்டு திருவருளும் குருவருளும் பெற்று மகிழ்ந்தனர்.

## தருமை ஆதீனத் திருக்கோயில்களில் சித்திரைத்திங்கட் பெருவிழா

**சீகாழியில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா 26—4—74 ஆம் நாள்முதல் தொடங்கி நடைபெற்றது. 27—4—74 அன்று திருமுலைப்பால் விழாவும், 30—4—74 அன்று இடபவாகனக் காட்சியும் 1—5—74 அன்று திருக்கல்யாணக் காட்சியும், 3, 4—5—74 ஆகிய இரு நாட்களிலும் திருத்தேர்ப் பெருவிழாவும் 5—5—74 அன்று தீர்த்தத் திருவிழாவும் நிகழ்ந்தன. நாள்தோறும் சிறந்த நாதசுர இன்னிசை, திருமுறைப் பாராயணம் முதலியவற்றுடன் திருவீதியுலா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

27—4—74 அன்று சைவசமயாசாரியர்களுள் முதலாமவராகிய திருஞானசம்பந்தருக்கு, உலக நாயகியாகிய உமையம்மை மூலம் ஞானப்பால் வழங்கச்செய்து பெருமான் இடபவாகனத்தில் காட்சி வழங்கிய திருநாள். அன்றுகாலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளிய பின்னர், திருஞானசம்பந்தர் சிவிகையில் பிரமதீர்த்தக் கரைக்கு எழுந்தருளுங்காட்சி நிகழ்ந்தது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் தேவார பாடசாலை ஆசிரியர், திரு. எம். சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்குத் 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டத்தையும் 501 வெண்பொற்காசுகளையும் வழங்கி பொன்னுடை போர்த்தி அற்புத விளக்க விரிவுரையைத் தொடங்கிவைத்து ஆசி வழங்கியருளினர்கள். தஞ்சை இந்து சமய அறநிலய ஆட்சித்துறைத் துணை ஆணையர், திரு. டி. என். சங்கரநாராயணன் பி. ஏ., பி. எல்., அவர்கள் தொடக்கவுரையாற்றினர்கள். தொடர்ந்து வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள், வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத்

தம்பிரான் சுவாமிகள், மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேல் முதலியார், தவத்திரு. ஊரன் அடிகள், புலவர். திரு. ந. ரா. முருகவேள் எம்., ஏ., எம். ஓ. எல்., வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், டாக்டர். திரு சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச். டி , சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் புலவர் திரு. இரா. செல்வக்கணபதி, ஆகியோர் அற்புதவிளக்க விரிவுரை நிகழ்த்தினர் ஆதீனத் திருக்கோயில் ஓதுவாமூர்த்திகள் தக்க பக்க வாத்தியங்களுடன் அற்புதப் பதிக பாராயணம் செய்தனர். நண்பகல் ஒருமணி அளவில் திருமுலைப்பால் வழங்கும் காட்சி நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுலைப்பால் விழாப் பிரசாதம் வழங்கி தருமைக்கு எழுந்தருளினர்கள். பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் வந்து வழிபட்டும் பிரசாதம் பெற்றும் உய்ந்தனர்.

இவ்விழாவை யொட்டி நாள்தோறும் - திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் கருத்தரங்கம், பட்டிமண்டபம், கவியரங்கம், முதலியன நடைபெற்றன. 27—4—74 மாலையில் ‘திருஞானசம்பந்தர் திருவவதாரத்தால் விளைந்த விளைவுகள்’ என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கம் தஞ்சை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் அவர்களின் தொடக்கவுரையுடன்' நிகழ்ந்தது. தவத்திரு ஊரன் அடிகள் தலைமையுரை ஆற்றினர்கள். சமயப்புரட்சி, சமுதாயமாற்றம் இலக்கியப் புதுமை என்ற தலைப்புக்களில் அறிஞர்கள் பலர் விரிவுரையாற்றிய பின்னர், திருநீலகண்டர் வரலாறுபற்றிய இன்னிசைக் கதை நிகழ்த்தப்பெற்றது.

28—4—74 அன்று ஞானசம்பந்தர் அவதாரத்தால் பெரிதும் நலம்பெற்றது சமயமா! சமுதாயமா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் நடுவராக இருந்து பட்டி மண்டபத்தைச் சிறப்புற நிகழ்த்துவித்தார்கள். அன்பர்கள் பலர் கலந்துகொண்டு தம் தம் கருத்துக்களை வலியுறுத்திப் பேசினர். பெரிதும் நலம் பெற்றது “சமயமே” என்ற நடுவர் தீர்ப்புக்குப் பின்னர் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

29—4—74 அன்று நிகழ்ந்த கருத்தரங்கம், திருச்சி திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. ஞானசம்பந்தருக்கு, நம்பியாண்டார் நம்பிகள், இராமலிங்கசுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகள் ஆகியோர் சூட்டிய புகழ்மாலைகள்பற்றிய விரிவுரைகள் நிகழ்ந்தன. திரு கே. சி. தியாகராசன் அவர்கள் “நந்தனர்” வரலாற்றை இன்னிசைக் கதையாக நிகழ்த்தினர்கள்.

30—4—74 அன்று ஞானசம்பந்தர் வழங்கும் உறவு நிலைகள் பற்றிய கவியரங்கம் திருச்சிராப்பள்ளி திரு அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. ஞானசம்பந்தர் என் தாய், தந்தை, காதலி, குழந்தை என்ற பல்வேறு தலைப்புக்களில் கவிதை இயற்றிப் பாவலர்கள் பலர் கவியரங்கேறினார்கள்.

1—5—74 அன்று திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல், அவர்கள் 'சைவ வழிபாடு' என்ற தலைப்பில் தமது கருத்துக்களை விளக்கி விரிவுரையாற்றிய பின்னர், திருஞானசம்பந்தர் வரலாறு. மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் பொம்மலாட்டமாக நிகழ்த்திக் காட்டப்பட்டது.

2—5—74 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்ந்தன. மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'அற்புதங்கள் வழங்கும் அறிவுரைகள்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றி, தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். அடுத்து பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலாக்காட்சி நடைபெற்றது.

திரு. எஸ். திருஞானசம்பந்தம் திரு. கே சொக்கலிங்கம் குழுவினரின் திருமுறை இன்னிசை நிகழ்ச்சியோடு மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

**திருக்கடவூரில் :**

தருமையாதீனம் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா 26—4—74 முதல் 5—5—74 முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 26—4—74 அன்று கொடியேற்றமும், 28—4—74 அன்று திருக்கல்யாணக் காட்சியும், 30—4—74 அன்று சகோபுரத்தில் இடபவாகனக் காட்சியும், 1—5—74 அன்று காலசம்காரக்காட்சியும், 3—5—74 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 5—5—74 அன்று தீர்த்தத் திருவிழாவும் நிகழ்ந்தன. காலை, மாலை இருவேளைகளிலும் திருவீதியுலா சிறந்த நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

1—5—74 புதன்கிழமை காலசம்காரத் திருநாளன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும் கலந்துகொண்டு வழிபட்டு

மகிழ்ந்தார்கள். ஆயிரக்கணக்கான பக்தர்கள் காலசம்காரக் காட்சியைக் கண்டு உய்ந்தனர்.

29, 30—4—74, 1—5—74 ஆகிய நாட்களில் மாலை 6 மணி அளவில் அறிஞர்களால் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பட்டன. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

30—4—74 அன்று திருமுறைவிழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளால் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. மாலை 7 மணியளவில் பண்ணிசைவாணர்களின் திருமுறைப்பாராயணத்தோடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது. கட்டளை விசாரணை ஸ்ரீமத் திருநாவுக்கரசு தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி சொற்பொழிவு நிகழ்ச்சிகளை உடனிருந்து நிகழ்த்தினர்கள்.

**திருப்பனந்தாளில் :**

தருமையாதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட்பெருவிழா 26-4-74 முதல் 5—5—74 முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 30—4—74 ஆம் நாள் பெருமான் தன்னைத்தானே அருச்சித்தலும் சகோபுரத்தில் இடபவாகனக் காட்சியும், 2—5—74 ஆம் நாள் திருக்கல்யாணக் காட்சியும், 4—5—74 ஆம் நாள் திருத்தேர்க்காட்சியும் 5—5—74 ஆம் நாள் பஞ்சமூர்த்திகள் கொள்ளிட நதியில் தீர்த்தம் கொடுத்தருளலும் இரவு துவஜாவரோகணமும் நடைபெற்றன. விழா நாட்களில் மாலை 6 மணி அளவில் சமயச்சொற்பொழிவுகள் நடைபெற்றன. 5-5—74 அன்று கொள்ளிடக்கரையில் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்களால் " குங்குலியக்கலய நாயனர் " வரலாறு இன்னிசைச் சொற்பொழிவாக நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் வழிபட்டும் சொற்பொழிவுகளைக்கேட்டும் உய்ந்தனர்.

**திருவையாற்றில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட்பெருவிழா 26—4—74 முதல் தொடங்கி நடைபெற்றது. 30—4—74 அன்று பெருமான் இடப வாகனத்தில் எழுந்தருளி, சந்நிதிமுன்னர், சைவர்களுக்கு மாகேஸ்வரபூஜை நிகழ்த்தும் காட்சி ஐயாற்றில் நிகழும் சிறப்புக் காட்சியாகும். 5—5—74 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும் துவஜாவரோகணமும் நிகழ்ந்தன. 7—5—74 அன்று சப்தஸ்தானத்திருவிழா. அன்று நந்திகேஸ்வரர் சுயசாம்பிகையுடன் மணக்கோலத்துடன் வெட்டிவேர்ச் சிவிகையிலும்

ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியுடன் கண்ணாடிச் சிவிகையிலும் ஏழூர் வலம் வருதலும் மறு நாள் ஆறூர் சுவாமிகளுடன் பல்லக்கில் ஐயாற்றுக்கோயிலுக்குள் எழுந்தருளும் ஆனந்தக் காட்சியும் நடைபெற்றன. இவை கண்கொள்ளாக் காட்சியாகும். இவ் விழா நாட்களில் மாலையில் அறிஞர்கள் பலர் சொற்பொழி வாற்றினர். அன்பர்கள் பலர் விழாவிற்கு வந்து பெருமானைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் உய்ந்தனர்.

## சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில், நாயன்மார்கள் குருபூஜை விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 1—4—74 முனையடுவார் நாயனார், 8—4—74 காரைக்கால் அம்மையார், 18—4—74 திருநாவுக்கரசர், 23—4—74 சிறுத்தொண்டர் நாயனார், 25—4—74 மங்கையர்க்கரசியார், 27—4—74 விறன்மிண்ட நாயனார் குருபூசை விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. விசேஷ வழிபாடுகளும், திருமுறைப்பாராயணமும், புராண விரிவுரைகளும் நடைபெற்றன. அன்பர்கட்கும் குழந்தைகட்கும் பிரசாதம் வழங்கப்பட்டன.

## தமிழ் வருடப் பிறப்பு விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில், 14—4—74 ஞாயிற்றுக்கிழமை தமிழ் வருடப் பிறப்பு விழா தமிழ்ப் பேராசிரியர் திரு. C. ஜெகந்நாதாச்சாரியார் தலைமையில் நிகழ்ந்தது. பாலவால்மீகி, திரு. இராமமூர்த்திசர்மா அவர்கள் பஞ்சாங்கம் வாசித்து ஆனந்த வருட நவநாயகர்களின் பலா பலன்களை விளக்கினார்கள். விழா முடிவில் திருமதி. பார்வதி ரங்கநாதன் B A., B. T., அவர்கள் குழுவினரால் அபிராமி அந்தாதி பாராயணம் செய்யப்பெற்றது. ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையுங்கூறி விழாவை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

## திருவாசக வகுப்பு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 7—4—74, 14—4—74, 21—4—74 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணியளவில் திருவாசக விளக்கவுரை வகுப்பு திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்களால் நடத்தப் பட்டது. அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன் பெற்றனர்.

## மாதாந்தர வழிபாடு

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு 28—4—74 ஞாயிறன்று

தி-நகர் ஸ்ரீ அகத்தியர் கோயிலில் மிகவும் சிறப்பாக நடை பெற்றது. நிலைய அன்பர்கள் சார்பில் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. வழி பாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. திரு. சோ. கிருஷ்ணன், புலவர். திரு. மு. கு புண்யகோடி இருவரும் கூட்டு வழிபாட்டின் சிறப்பையும் அதன் பலனையும் விளக்கிக்கூறி இந்த மாதிரியான வழிபாட்டிற்கு சென்னைக்கு வழிகாட்டியது, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையந்தான் என்றும், அதனைத் தொடர்ந்து 14 ஆண்டுகட்குமேல் நடத்திவருவது ஒரு அரிய சாதனை என்றும். அதனை, சென்னை வாசிகள் இன்னும் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும், இந்த வழிபாடு மென் மேலும் சிரும் சிறப்புமாக நடந்துவர எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமெனவும் கூறினர்கள். வழிபாட்டில் பல அன்பர்கள் கலந்துகொண்டனர்.

## கிருத்திகை வழிபாடு

சென்னை, சமயப்பிரசார நிலைய அன்பர்கள் சார்பில், வேலூர் ஸ்ரீசெல்வமுத்துக்குமார சுவாமிக்கு அபிஷேக ஆராதனை கள் செய்து கிருத்திகை வழிபாடு நிகழ்த்தப்பட்டது. 23—4—74 அன்று காலை நிலைய அன்பர்கள் ஐம்பது பேர் தனி உந்தூர்தி யில் சென்னையிலிருந்து புறப்பட்டு, திருவெண்ணை நல்லூர், திருநாவலூர், திருவதிகை, வடலூர், சிதம்பரம் முதலிய தலங் களை வழிபட்டுக்கொண்டு வேலூருக்கு வந்து சேர்ந்தனர். 24—4—74 அன்று ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானையும், ஸ்ரீ தையல் நாயகியையும் வழிபட்டு, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு கார்த்திகை நாளில் நிகழும் சந்தனக் குழம்பு அபிஷேக தரிசனம் செய்து மகிழ்ந்தனர். பின்னர் சீகாழியில் ஸ்ரீ சட்டைநாதப்பெரு மான் திருக்கோயிலில் வழிபாடுநிகழ்த்தி சென்னைக்கு மீண்டனர்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 25—4—74 வியாழனன்று மாலை 7 மணிக்கு வேலூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா திரு இராமகிருஷ்ணன் (City Cuvil Court Judge) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிலையத் தேவார ஆசிரியர் திரு. சு. ஞானப்பிரகாசம் வேலூர்த் தேவாரம் திருப்புகழ்ப்பாராயணம் நிகழ்த்தினர். திரு. N. பழனியப்பன் B. A., B. L., அவர்களது வரவேற்புரைக்குப் பின்னர். திரு. B. C. லிங்கம் 23—4—74, 24—4—74ல் நிலைய அன்பர்கள் செய்த யாத்திரை அருளனுபவத்தைப்பற்றி பேசினர்கள். திரு. C சுப்பிரமணிய தேசிகர் நன்றியுரை கூற விழா இனிது நிறை வேறியது.

குத்தாலம்,

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகத்தில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் (பெரிய கோயில்) ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில். ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகச் சார்பில் 5-5-74 சித்திராபௌர்ணமியன்று குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் சிறப்புக் கூட்டம் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், அப்பர் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து அப்பர் காட்டிய வழியில் எல்லோரும் சமயப்பணி புரியவேண்டும் என்று தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். கழகச் செயலர் சி. கோவிந்தராசலு நன்றிகூற விழா இனிது நிறைவெய்தியது;

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம், குத்தாலம்.

1974 மே 5. இன்று நாம் குத்தாலம் அருள்மிகு சொன்னவாறறிவார் திருக்கோயில் வழிபாட்டுக்குச் சென்றிருந்தோம். திருக்கோயில் சிவாச்சாரியர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக வழிபாடு செய்வித்தார்கள். திருக்கோயில் மிக்க தூய்மையுடன் திகழ்கிறது. இது தருமபுர ஆதீனத் திருக்கோயில் ஆதலால் வியப்பல்ல.

(ஒ-ம்) குன்றக்குடி அடிகளார்.

* * * *

24—3—74 ஆகிய இன்று மாலை குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் தங்களது 27வது ஆண்டு 12வது ஆதிவார வழிபாட்டைத் திருவருட்டுணைகொண்டு செய்தார்கள். வழிபாட்டுக் காலத்தில், ஆலயக் கண்காணிப்பாளர், சிவாச்சாரியார்கள் யாவரும் உடனிருந்து வழிபாடு செம்மையாக நடைபெறத் துணையாக இருந்தார்கள். திருமூர்த்தங்கள் எல்லாம் மிக நல்ல முறையில் அலங்கரிக்கப்பெற்று காட்சியளித்த சிறப்பு மிகவும் பாராட்டுதலுக்கு உரியது. ஆலயம் எங்குமே மிகவும் துப்புரவாக இருந்தது. இந்தச் சிறப்புக்களுக்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாட்சியின் மிகச் சீரிய தன்மையேயாகும்.

தங்கள்,

(Sd.) பதி. சோ. சிங்காரம்

24—3—74. (Sd.) S. சுந்தரேசன்.

கடிதம் :

MRS. SOUNDRA KAILASAM
C/o. P. S. Kailasam
Judge, High Court

Madras.
28—4—1974

தேவரீர் ! அன்பிற்கும் வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரிய தவத்திரு. குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடித் தாமரைகளுக்கு வணக்கங்கள்.

தங்கள் அன்பான ஆசியாலும் திருமுருகப்பெருமான் திருவருள் துணையாலும் நல்ல மனம் படைத்த பெரியோர் களின் அன்பினாலும் செவ்வாய்க் கிரஹம் மிக நல்ல முறை யில் பிரதிஷ்டை செய்யப்பட்டுவிட்டது என்பதை மிகவும் மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதிலே பெருமையடைகிறேன். தங்கள் ஆசியும் அருள் பிரசாதமும் சரியான கும்பாபிஷேக நேரத்திலே வந்து சேர்ந் தது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தஞ்சை மாவட்டத்தில் தருமபுர ஆதீனக் கோயில்களில் எங்குக் கும்பாபிஷேகம் நடந் தாலும் கயிலைக் குருமணியவர்கள் எங்களை வந்தே தீரவேண் டும் என்று அருள்கலந்த அன்புக்கட்டளை இடுவார்கள். நாங் களும் அவர்கள் கட்டளையைத் தலைமேற்கொண்டு தவளுது வந்திருந்து அவர்கள் அன்பு அருளினை அனுபவித்துத் திரும்பு வோம். தாய்விடுசென்று திரும்பும் மகளின் மனநிலையே எனக்கு இருக்கும். இம்முறை அடியேன் செய்த இந்தக் 'குட்டி'க் கும்பாபிஷேகத்தின் 'பந்தக்கால்' போட்ட அந்தப் புனித நிகழ்ச்சியின் தொடக்கத்திலிருந்து கும்பாபிஷேகம் இனிது முடிகின்றவரை கயிலைக் குருமணி அவர்களின் நினைவு என் நெஞ்சைவிட்டு நீங்காமல் என் கண்களைக் குளமாக்கிக் கொண்டே இருந்தது. பார்க்குமிடமெல்லாம் அவர்கள் நீக்கமற நிறைந்திருந்து இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பது போன்ற உணர்வே என்னுள் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது.

தெய்வமாகிவிட்ட அவர்களின் அடுத்த வாரிசாக-பட்டமாக வந்துள்ள தங்களிடமிருந்துவந்த அருள் ஆசி என் மனத்திற்கு ஆறுதலாகவும், அவர்களே நேரில் வந்ததுபோன்ற மன நிறை வும் மகிழ்ச்சியும் அளித்ததாகவும் இருந்தது. இனி தங்களையே அவர்கள் நினைவாகவும், பொருளாகவும், பாசமாகவும், பற்றாக வும், பக்தியாகவும், பந்தமாகவும் வைத்து வணங்கி வழிபட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது. தாய்வீடு என்றுமே மகளுக்கு உரிய அன்புவீடு. இத்தகைய அன்பு வீட்டிலிருந்து – தாய்வீட்டிலிருந்து – அருள்வீட்டிலிருந்து என் றும் தங்கள் ஆசியையும் அருளையும் அன்பையும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறோம்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

**( ஆனந்தஹு வைகாசிமீ 1௳ முதல் 31௳ முடிய )**

**( 15—5—74 முதல் 14—6—74 முடிய )**

ஸ்வஸ்தி ஸ்ரீ ஆனந்தஹு சித்திரைமீ 31௳ (14—5—74) செவ்வாய்கிழமை அஷ்டமி 51-24 அவிட்டம் 53-27 கூடிய சுப தினத்தில் உதயாதி நாழிகை 34-54க்கு விருச்சிக லக்னத்தில் ஸ்ரீ லோகரக்ஷகரான சூரியபகவான் உலக க்ஷேமத்தின் பொருட்டு, பூர்வ ராத்திரியில் அகஸ்தானத்தில் குருசந்திர யோகத்தோடு ரிஷபராசி பிரவேசம் (விருஷபஸங்கிரமணம்) செய்கிறார். ஷை பிரவேச காலபலன் உலகெங்கும் பிரஜைகள் சுகவாழ்வுடனும் மனோரத சித்தியுடனும் பூலோக வாழ்க்கையை சந்தோஷத்துடன் அனுபவிப்பார்கள். உலகில் அமைக்கப்பட்டு இருக்கும், தர்மஸ்தாபனங்களும் தேவாலயாதிகளும் ஆசாரிய பீடங்களும் ஆகியவற்றில் உள்ளவர்களும் தர்மத்தை ரக்ஷித்துக் கொண்டு தெய்வ சான்னித்யத்தோடு பிரகாசித்துக்கொண்டு இருப்பார்கள்.

குறிப்பு :- ஷை வைகாசி மாதம் 21௳ (4—6—74) செவ்வாய்க் கிழமை பௌர்ணமி கேட்டை நக்ஷத்திரத்தில் சம்பவிக்கும் கிருஷ்ணதாம்ரவர்ணமுள்ள ராகுகிரஸ்த பர்சுவசோமோபராக புண்ணியகாலம் ஏற்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மேற்படி கிரஹணம் | ஸ்பர்சகாலம் | இரவுமணி | 2—9 |
| ,, | மத்தியகாலம் | ,, | 3—46 |
| ,, | மோக்ஷகாலம் | ,, | 5—23 |

அனுஷம் கேட்டை மூலம் ஆயில்யம், ரேவதி மேற்படி நக்ஷத்திரங்களில் ஜெனனம் ஆனவர்கள் மேற்படி தினம் விரத உபவாசம் இருந்து ஸ்நானதானாதிகள் செய்துகொள்ள ஷை கிரக தோஷங்கள் நிவர்த்தியாகி சௌக்கியம் ஏற்படும். சுபம் உண்டாகும், கடவுள் காப்பார்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத் தரும். ஜீவனம் விருத்தியாகும். வியாதி நிவர்த்தியாகும். உறவினர்களாலும் நண்பர்களாலும் நன்மை ஏற்படும். விவாஹாதி சுபங்கள் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருக்கும். அடிக்கடி தொழில் மாறும். வீண் செலவுகளும் குடும்பத்தில் தொல்லைகளும் ஏற்படும். வைத்திய செலவு ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் ரொம்பவும் சிரமத்தைக்காட்டும். சத்துருக்களால் உபத்திரவம் உண்டாகும் எதிர்பாராத சில நஷ்டங்கள் ஏற்படும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். நினைத்த படி எந்தக் காரியமும் நடக்காது. ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். குடும்பத் தொல்லைகள் அதிகமாக இருக்கும். வைத்தியச்செலவு அதிகமாக இருக்கும். கடன் தொல்லைகள் அதிகமாகும். சத்ரு பாதைகள் உண்டாகும். மனம் நிம்மதியாக இருக்காது. எதிர்பாராத செலவுகள் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தூர தேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். புதிதான முறையில் தொழில் ஏற்படும். வியாதி குணமாகும். குடும்பத்தில் மங்கள கரமான காரியங்கள் நடந்துகொண்டு இருக்கும். வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். கவலை அதிகமாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் நஷ்டம் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். அடிக்கடி தொழிலும் இடமும் மாறிக்கொண்டு இருக்கும். வீண் செலவுகளும், மனஸ்தாபங்களும் உண்டாகும். நினைத்த காரியங்கள் தவக்கத்தோடு நடக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். அடிக்கடி சஞ்சாரங்கள் ஏற்படும். செலவுகள் அதிகமாகும். ஜீவன விஷயமாக அடிக்கடி மாறுதல் ஏற்படும். குடும்பத் தொல்லைகள் இருந்துகொண்டே இருக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். அடிக்கடி வைத்திய செலவு இருந்துகொண்டே இருக்கும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். பொருளாதாரத்தில் பற்றாக்குறை இருந்துகொண்டு இருக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். சஸ்யதான்யங்கள் விருத்தியாகும். ஜீவனம் விருத்தியாகும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும். கடன் நீங்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். வியவகாரம் ஜெயிக்கும் நினைத்த காரியங்கள் நடக்கும். எதிர்பாராத சில நன்மைகள் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். கடன் நிவர்த்தியாகும். வியாதி நிவர்த்தியாகும். கிரஹ சுகம் ஏற்படும். மனம் நிம்மதி அடையும். குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடந்துகொண்டு இருக்கும். ஸ்திர சுகஜீவனம் ஏற்படும். தெய்வ பலத்தால் சகலமும் சாத்தியமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.